ROYAL COLLEGE
COLOMBO



# சிவசக்தி '87

# சமர்ப்பணம்



## ஸ்ரீ அரவிந்தர்

"ஒவ்வொருநாளும் அவன் தனது அற்புதங்களை எனக்கு காட்டி, இந்துமதம் முற்றிலும் உண்மை என்பதை நான் அறியும்படி செய்தான் முன்பு எனக்கு பல சந்தேகங்கள் இருந்தன. நான் இங்கிலாந்தில் அந்நியக் கருத்துகளிடையே, முற்றிலும் அந்நியச் சூழ்நிலையில் வளர்ந்தேன். முன்பு நான் இந்து மதத்திலுள்ள பல விஷயங்களை வெறும் கற்பனைகள் என்றும், கனவுகள் என்றும், அதில் சொல்லப்பட்டிருப்பவற்றுள் பல மதிமயக்கத்தில் எழுந்தவை என்றும, வெறும் மாயை என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் இப்போது ஒவ்வொருநாளும் என் மனத்திலும் என் உள்ளத்திலும், என் உடலிலும் இந்து மதத்தின் உண்மைகளை உணரலானேன். அவை அறிவியலால் விளக்கம் கூற முடியாத பல விஷயங்களை எனக்குக் காட்டுகிறது".

# சமர்ப்பணம்



ஸ்ரீ அரவிந்தர்

[illegible]

# இறை வணக்கம்

சுவாமியும், அம்மை யாரும், மகிழ்ந்து முன்தோன்றினபடியால் 'மூத்த பிள்ளையார்'' எனும் திருநாமத்தையும் நல்கி, ''எக் காரியங்கள் செய்ய ஆரம்பிப்பவர்களும் முதல் உன்னையே நினைக்க வேண்டும் எனவும், வினைகளை நீக்கும் ''விக்கினேஸ்வரனாக விளங்குவாயாக'' என ஆசீர்வதித்து சென்றனர்


அடைந்தோருக்கு, ஞானத்தினால் மோட்சத்தை கொடுக்கும் தலைவராய் உள்ள பரப்பிரம பொருபி, கணபதியே சக்தி, சிவம் ஆகிய இரண்டையும் குறிக்கும் ''உ''யை மூலமந்திரமாக வழிபட்டு நிற்கும் எமக்கு அருள்புரி அதற்கு திருமூலர் திருமந்திரத்தை வழிமொழிகின்றோம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்.

ஐந்து திருக்கைகளை உடையவர்; யானை முகம் உடையவர்; சந்திரனின் இளம்பிறையைப் போன்று வளைந்த வெண்மையான தந்தங்களை உடையவர். நந்தி என்னும் சிவபெருமானின் மகன் அவர். அவரே ஞானத்தின் கொழுந்தாகவும் விளங்குகின்றார். அப்பேற்பட்டவரை நாம் வணங்கி வழிபடுவோமாக!



## சைவ நற்சிந்தனை

அருவுருவத் திருமேனியாகிய சதாசிவமூர்த்தியை குறிப்பது சிவலிங்கம், சிவலிங்கம் பார்வைக்கு உருவமும் அங்கங்கள் பூரணமாய் அமையப் பெருமையால் உருவம் இல்லாமையுமாகிய இரு தன்மைகளையும் உடையது. சிவத்தின் பெயர்=சிவலிங்கம். சிவம்=கடவுள்; லிங்கம்=அடையாளம்; சிவலிங்கம்=கடவுளைக் காட்டும் அடையாளம். சி=நாத வடிவமான சிவம்; அது சிவலிங்கத்தின் மேலிருக்கும், தண்டுபோல நீண்டிருப்பதைக் குறிப்பது.

வ=நாத விந்து வடிவமான சக்தி! அது கீழ் அமைந்த பீடம்; அதை ஆவுடை என்பர்; அது சக்தி வடிவமானது. ஆவுடையின் மேற்புறத்தில் கோமுகை போல் ஒரு பகுதி நீண்டிருக்கும். லி=லயம் — ஒடுக்கம்; கம்=பிறத்தல்—தோன்றுதல் எனவே, லிங்கம்=சகல அண்ட சராசரங்களும் தோன்றி, நின்று, ஒடுங்குவதற்கு நிலைக்களமாய் உள்ளது,

மின்சாரத்தில் ''பொசிட்டிவ்', ''நெகடிவ்'' என்ற இரண்டு சக்திகள் உள்ளன அணுவில், பச்சை நிறமான வட்டவடிவுடைய ஒன்றின்மேல், அதன் நடுவில் செந்நிறம் பொருந்திய ஒரு சோதி தோன்றுகிறது என்றும், அதை இன்னது என்று சொல்ல முடியவில்லை, என்றும் தற்கால விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

பொருள்குணி; அதன் சக்தி, குணம், எல்லாப் பொருள்களிலும், சிவம் சக்தியாகிய இரண்டும் கலந்திருப்பதை அறிந்து கொள்ளவே இவ்வடிவமாய் இறைவன் காட்சி கொடுத்து நின்று அருளுகின்றார்.

# Our Good Wishes

Ceylon Tobacco Company Limited

## *THE PRINCIPAL'S MESSAGE*

It is with great pleasure that I contribute this message to this year's Issue of the 'Sivasakthi' which marks the 1987 celebrations of the traditional Hindu Festival the 'Kalai Magal Vizha'.

The celebration of the Kalai Magal Vizha, the tribute paid to the triumvirate consisting of the deities Durga, Lakshmi and Saraswathie, is held annually in every Hindu household and has been raised to a prestigious ceremony by the Hindu Students' Union.

Religious ceremonies such as the Kalai Magal Vizha not only promote good religious habits but also contribute, in no small way, to peace and harmony both within the school and without.


The wide participation at these ceremonies irrepective of race or creed tends to create a friendly, harmonious atmosphere so neccessary for any educational institution

On this occasion, while congratulating the Teacher-in-charge and the members of the Hindu Students' Union, I wish the function all success.

Principal,
Royal College.

# Making treats with is so quick & easy!

**Milkmaid Coffee Cream.**



**Make it delicious with Milkmaid.**

**For further delicious recipes write to: Nestle Lanka Limited, 440, T.B. Jayah Mawatha, Colombo 10.**



# பொறுப்பாசிரியை

# ஆசியுரை

அன்புடையீர்,

றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றத்தினால் கல்வித் தெய்வம் கலைமகளுக்கு நடாத்தும் விழாவுடன் மலர்கிறது, சிவசக்தி

''அருளது சக்தியாகும்
அரன் நனக்(கு) அருளேயின்றித்
தெருள் சிவம் இல்லை
அந்தச் சிவன் இன்றிச் சக்தி இல்லை''——என்கிறார் திருமூலர்.

இவ்வுண்மைக்கமைய இந்து மாணவர் மன்றத்தினர் தாம் வெளியிடும் மலரினை சிவசக்தி எனப்பெயரிட்டுள்ளனர். வருடாந்தம் வெளிவரும் இம்மலர் இந்து மாணவர்கள் தம் கட்டுரை ஆற்றல்களையும் கவிதைப்புலமைகளையும் புலப்படுத்துவதற்கு ஓர் சிறந்த வாய்ப்பை அளித்துவந்துள்ளது. இம்முறையும் சீரும் சிறப்பும் குன்றாது வெளிவரும் சிவசக்தி மலரின் பொறுப்பாசிரியர் என்ற தகுதியில் ஆசியுரை வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்,

என்றும் வாடாத இம் மலர் உங்கள் கைகளில் தவழும் வேளையில் றோயல் கல்லூரி இந்து மாணவர், அன்னையின் அருள் நாடி கலைமகள் விழாவினை அரங்கேற்றுகின்றனர், தம்முள் அடங்கியிருக்கும் கலைத்திறனையும், கலைத்தாக்கத்தையும், இவ்விழாவில் வெளிப்படுத்தி அன்னையின் அருள்பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்,

கடந்த காலத்தைப்போல் இனிவரும் காலத்திலும் இந்து மாணவர் மன்றத்து மாணவர்கள் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு கலைமகள் விழாவினை இனிய திருவிழாவாக இசைக்க எல்லாம்வல்ல சகலகலாவல்லியாம் அந்தத் தயாளினியின் பாதம் பற்றி பணிவாய் வேண்டுகிறேன்.

அருள்புரிவாய் அன்னையே.

செல்வி சி, செல்லையா
பொறுப்பாசிரியை.

**With Best Compliments**

**from**

# National Livestock Development Board

**P. O. BOX 1748,**
**No. 40, Nawala Road,**
**Narahenpita - Colombo 5.**

# மாணவத் தலைவனின்

# சிந்தனைத் துளிகள்

''சொல்லிற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந்தற் தடிமைகொள் வாய் நளி ஞசனஞ்சேர்
செல்விக்கரிதன் ஞெருகால முட்சிதையாமை நல்குங்
கல்வி பெருஞ் செல்யப் பேறே சகல கலாவல்லியே''.

என்கிறார் குமரகுருபர சுவாமிகள்.

அச்கல்விப் பெருஞ்செல்வப் பேருகிய கலைமகளின் அருளைத் தேடி விழா எடுக்கின்றனர், றோயல் கல்லூரி இந்து மாணவர்கள். இவ்வாறு நாம் விழாக்கோலம் கொள்ளும் வேளையில் வழமைபோல் மலர்கிறது, சிவசக்தி எனும் வெளியீடு. என்றும் பொழிவுடன் மிளிரும் இம் மலரினை வெறும் விளம்பரத் தொகுப்பாக்காது மாணவர்களின் சுய ஆக்கங்களை வெளிக் கொண்டுவந்து அவர்களை ஊக்குவிக்கும் கருவியாக வெளியிடுவதற்கு எமது இதழாசிரியர் குழு அயராது உழைத்துள்ளது. அவர்களது விடா முயற்சியும் அயராத உழைப்பும் வருங்கால மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இக் கலைமகள் விழாவினை நடாத்துவதற்கு முன்வந்து தோள் கொடுத்த சக மாணவர்களுக்கும், சிறியோர் ஆகிய நாம் செய்த பிழைகளை பொறுத்து எமது ஊக்கம் குன்றாது பல சிரமங்களுக்கு மத்தியில் எமது சகல முயற்சிகளிற்கும் உறுதுணையாக இருந்து வழிகாட்டிய பொறுப்பாசிரியை அவர்களுக்கும் எம் கடமைகள் இடரின்றி, இனிது நிறைவேற இளைக்காமல் உதவிய ஏனைய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக எமக்கு ஊக்கத்தையும் ஆர்வத்தையும் தந்து இவ் விழாவினை வெற்றிகரகமாக நடாத்துவற்கு எமக்கு அனுமதி அளித்த அதிபர் அவர்களுக்கு என் முழுமனதான நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்காலத்தில் எம் மாணவர்களிடையே கல்விச்செல்வம், ஒழுக்கம் ஆகியன வளர்ந்து விளங்க வேண்டும் எனக் கலைமகளின் பாதங்களை வணங்கி விடைபெறுகிறேன்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

ச. லிங்கன்

Bata
by choice

# செயலாளரின் செப்புரை

சைவசமய வாழ்க்கை நெறி வெறும் புத்தகப் படிப்பாகவும் பொழுதுபோக்காக வும் குன்றுகிறது எனும் அச்சம் எழுப்பப்படும் இவ்வேளையில், சைவத்தின் பழைய சிறப்பை நிலைநாட்டுவதையே கண்ணும் கருத்துமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது, றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம். மாணவர்களிடையே சமய உணர்வை ஏற்படுத்தி எமது அன்றாட வாழ்க்கையில் சைவத்தின் பங்கையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக் காட்ட எத்தனித்து வந்துள்ளோம்.

இதற்காக நாம் பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பிரார்த்தனைகள், சமயப் பெரியாரின் பிரசங்கங்கள் என்பனவற்றை நடாத்துகின்றோம். இவ்வாறான எமது நடவடிக்கைகளுள் மாணவர்களாகிய எமக்கு கண்ணின் மணிபோன்றது, கலைமகளுக்கு முடிசூட்டும் பணியில் நாம் நடாத்தும் கலைமகள் விழா.

தவிர்க்கமுடியாத காரணங்களால் இம்முறை நவராத்திரி பூசையுடன் அவ் விழாவினை வைக்க முடியவில்லை. இருந்த போதிலும் நாம் எமது சமயக் கடமையினை மறக்கவில்லை. நவராத்திரிப் பூசையின் இறுதி நாள் எமது கல்லூரியில் சமயப் பிரார்த்தனைகளை நடாத்தியுள்ளோம்.

கலைமகள் விழாவுடன் ''சிவசக்தி'' வெளியிடப்படுகிறது. இது மாணவர்களின் உள்ளத் தடாகத்தில் அமிழ்ந்திருக்கும் ஆக்கங்களை கரைசேர்க்கும் ஓடமாக விளங்குகிறது.

வருடாவருடம் வெளிவரும் சிவசக்தி மலரின் தரத்தை அதிகரிப்பதே எமது விருப்பம் ஆகும். ஆனால் அதற்குத் தேவையான நிதி எம்மிடம் இல்லை; என்பதையும் நாம் கவனத் திற்குள் எடுக்க வேண்டியுள்ளது. எமது சகல நடவடிக்கைகளும் ''சிவசக்தி''யில் வெளிவரும் விளம்பரங்கள் மூலமே பெறப்படும் நிதியிலேயே தங்கியுள்ளது. எனவே பெரியோர்களே[

எமக்கு நீங்கள் செய்யக் கூடிய அளப்பெரும் உதவி எமது மலரில் விளம்பரிப்பதே என் பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்,

இறுதியாக இம்மாலைப்பொழுதில் இவ்விழாவினை நடாத்துவதற்கு அயராதுழைத்து உதவிபுரிந்த எனது சகமாணவர்களுக்கும் எமக்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த பொறுப் பாசிரியை அவர்களுக்கும் எமது கனவை நினைவாக்கும் பாதையில் உதவிக்கரம் நீட்டிய ஏனைய ஆசிரியர்களுக்கும் எனது நன்றியினை தெரிவிக்கிறேன். அத்துடன் நம் ஊக்கம் இழக்காது செயற்பட ஆர்வம் அளிக்கும் உங்கள் அனைவரிற்கும் எனது நன்றிகளை கூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்.

**With Best Compliments**

**From**

# AITKEN SPENCE SHIPPING LTD.

Agents for

*LLOYD TRIESTINO OF ITALY*

Operators of a fully Containerised Shipping Service to
Adriatic and Mediteranien Ports

**1st Floor, Lloyds Building, Colombo-1.**

Telex: 21142 & 21593

Telephone: 21861-8, 540421-5

## A MESSAGE FROM THE BUDDHIST BROTHERHOOD OF ROYAL COLLEGE

It is with great pleasure that the Buddhist Brotherhood of Royal College accept the request to give a message to the magazine Published by the Hindu Students Union. We wish them the very best as well in their traditional holding of their Kelai Magal Vizha

These two societies are linked together in their activities giving all the assistance for the religious functions organised by the School.

The aim of both these societies is to stop the deterioration taking place in the material world, and accelerate the spiritual development, especially of the younger generation. From very ancient times, almost every Buddhist temple had a devale for the worship of Gods, revealing the bond between Buddhism and Hinduism. In future too, this bond should continue I wish peace and harmony will prevail among the different races in this country, through the combined activities of the Hindu and Buddhist societies of Royal College.

We wish them abundantly
**Mrs. S. Dharmasiri**
Senior Vice President
Buddhist Brotherhood of Royal College,

Royal College,
Colombo.

With Best Wishes

From

## Amalgamated Transport & Trades

**No. 2. Bankshall Street,**

**Colombo-11.**

Telephone: 24727

521 - 336

With Best Compliments

from

## Multifoods (Pte) Limited

**P. O. Box 2040**

**Colombo.**

● EXPORTS ● IMPORTS ● REPRESENTATION

Telephone: 549576
Telex: 22218 Mulfood CE
Cable: Multifoods/Colombo.

## THE MESSAGE FROM THE ROYAL COLLEGE STUDENT'S CHRISTIAN MOVEMENT

It is with pleasure that we send this message to the Hindu Students Union. In the best traditions of the School, the students of different religious and ethnic backgrounds have worked together despite conflict elsewhere in the country.

We think it is time that we focused on a different aspect of the ethnic problem still smoldening in our land — the personal aspect. It is time we stopped to remember the persons of different ethnic backgrounds to whom we should be grateful. A word of encouragement, a kindness extended, a deep friendship, the faithful services rendered, a sacrificial act, these have always crossed the tarriers of religion, class and ethnic background. Let us think especially of the people of a different ethnic group to ours whose unselfishness, love and faith in us, have enriched our lives.

The inbuilt human qualities of a sence of justice and fair play, empathizing with those who are suffering, placing a high value on human life upholding truth at any cost are qualities given to us by Almighty God Himself.

As mighty forces of evil work to eraze all these and destroy right values, human relationships, and life itself, let us Students of Royal together, be the shining lights that show forth life the way it ought to be lived

"Love one another, as I have loved you.'

Lord Jesus Christ !

Best Compliments

from

# ALLIANCE FRANCAISE

LEARN FRENCH

AT

Alliance Francaise

54, Ward Place,
Colombo - 7.
Tele; 94162

**"French your passport to the Seven Heaven"**

## *THE MESSAGE FROM THE*

## *ROYAL COLLEGE ISLAMIC SOCIETY*

Royal College is unique in that she has successfully maintained her tradition of peace and harmony among her children irrespective of race, caste, creed or colour, through the years and in the face of most trying conditions. The numerous religious societies in the Collоge have always worked side by side with amity, consideration and understanding which is indeed praiseworthy.

It is with great pleasure that the Royal College Islamic Society contributes this message of goodwill to the issue of the "Sivasakthi" on the occasion of the Kalai Magal Vizha 1987.

The Royal College Islamic Society wishes the occasion all success.

**M. H. M. Farouk**
Master-in-charge
Royal College Islamic Society

Royal College,
Colombo 7, 25th Sept, 1987

**With best compliments**

**from**

# GEORGE STEUARTS & CO. LTD.

**45, Janadhipathi Mawatha,**

**COLOMBO-1-**

# இதழாசிரியரின்

# இதயதாகம்

இங்கிதமான இப் பொன் மாலைப் பொழுதினிலே வீசுகின்ற தென்றலின் மத்தியில் இறுதிப் பக்கம் வரை சுவைத்த கரங்களால் வடிக்கின்ற சில வரிகள் ..........

''சிவம் இன்றேல் சக்தி இல்லை.
சக்தி இன்றேல் சிவம் இல்லை''

என்பதற்கமைய இன்றைய நிலைமையையும் சகல அம்சங்களையும் கருத்திற்கொண்டும் இவ்வண்ண மலரான ''சிவசக்தி'' 87'யை உங்கள் கரங்களில் தவழவிட்டுள்ளோம். இம் மலர் எம் மாண வர்களின் நல்லெண்ணங்களையும், நல்லாசிகளையும் வழங்கும் வண்ணம் வாசகர்களுக்கு தன்னால் இயன்றதை முன்வைக்கிறது.

நடந்த கால்கள், பின்னே செல்ல எடுத்த கரங்கள் எல்லாம் எம்மை அரவணைத்த கரங்க ளாக மாறி என்றும் மணம் கமழும் சிவசக்தி ஒன்றை தவழ விடுவதில் நாம் வெற்றிக் கண்டுள் ளோம்.

மேலும் எம்மீது நம்பிக்கை வைத்த மன்றத்தினருக்கும் அயராது ஆலோசனைகளை அள்ளித் தந்த ஆசிரியர்களுக்கும், ஆசிகளை வழங்கும் உங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எம்மையும் மீறி இங்கே சில சின்னஞ்சிறு தவறுகள் தோன்றியிருப்பின் அதை அன்புடன் பொறுத்தருள்வீர் என்று எதிர்பார்க்கிறோம், எம் இளைய தலைமுறையின் எழில்மிகு செயல்திறனை பாராட்டி வரவேற்கும்படி பணிவோடு வேண்டுகிறோம். நம் நம்பிக்கைகள் நலமே நிறைவேற அன்னை கலைவாணியை அன்போடு நினைத்துருகிறோம்.

இறுதியாக இம்மலரை இதமாக புரட்டுங்கள் நிச்சயமாக இதயத்திற்குரிய இனிதான மருந் தாகும். உங்கள் விமர்சனங்களை எங்கள் பணிவோடு வேண்டுகிறோம், நம் நம்பிக்கைகள் நலமே நிறைவேற அன்னை கலைவாணியை அன்போடு நிலைத்துருகிறோம்.

இறுதியாக இம்மலரை இதழாக இதமாக புரட்டுங்கள் நிச்சயமாக இதயத்திற்குரிய இனி தான மருந்தாகும். உங்கள் விமர்சனங்கள் எங்கள் பணிக்குப் பரிசாகட்டும். உங்களில் ஒருவனாக நின்று நாமும் சிவசக்தியை நுகர்வோம்.

உங்களுடன் சேர்ந்து இம்மலரை
இதமாக புரட்டும் உங்கள் அன்புக்கு இனிய
**இ. இரவீந்திரன்**
இதழாசிரியர், சிவசக்தி 87.

# உண்மையான பக்திக்கான கடினப்பாதை

சேயின் மீதான தாயன்பு வர்ணிக்க இயலாதது. இருப்பினும் தன் கண்மணி குற்றம் செய்யும் போது அவள் அதை கண்டிக்காமல் விடுவதில்லை. ஆனால் இருவருக்கும் இடையில் உள்ள பிரிக்க முடியாத பாசம் காரணமாக ஒரு சிறு தேரத்தில் குழந்தை தாயின் அரவணைப்பில் உள்ளது.

இதுபோலவே நமது நாளாந்த வாழ்க்கையில் இறைவன் மீது நம்பிக்கை உடையவர்கள் துன்பப்பட, இறைநம்பிக்கை அற்றவன் அநீதியான செயல்கள் மூலம் நன்றாக வாழுகிறான்.

மானிடராக பிறந்தவர்கள் யாவரும் தாம் முற்பிறப்பில் செய்த கருமவினைகளின் பயனாக அதை அனுபவிக்கவே தோன்றியுள்ளனர். இப்பயனை நல்லவனாலும் தீயவனாலும் அனுபவித்தே தீர வேண்டும். ஆனால் கடவுள் நம்பிக்கை இல்லாமல் மேலும் தீமைகளை செய்பவன் மீண்டும் மீண்டும் பல பிறவிகளை எடுத்து கருமங்களை அனுபவிப்பான். ஆனால் கடவுள் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டவனை கடவுள் என்றும் காப்பாற்றுவார். இதில் அண்ணளவும் சந்தேகமில்லை. அவள் தன் கருமவினைகளை அனுபவிக்கும் போது கடவுள் அவனின் கஷ்டங்களை ஓர் எல்லைக்கு மேல் செல்லவிடாது அவற்றைப் போக்கி காப்பாற்றுவார். இவர்கள் வாழ்க்கையில் மேலும் உயர்ந்தவர்களாகவே காணப்படுவர்.

இதனால் மேன்மையை விரும்பும் ஒவ்வொரு மானிடனும் இறைவனின் புனிதமான வழியான உண்மை, கண்ணியம், கடமையின் வழிநின்று ஒழுகவேண்டும். இவர்கள் இறைவனின் திருப்பாதங்களை அரவணைத்து இருப்பார். ஆனால் தீய பாதையில் செல்பவர்களின் மரண நிழலே இறைவனின் பாதத்தில் படும்.

# EDITORIAL

## Arduous Path of True Devotion

A mother's affection for her child is indescribable. Still on occasions, she will not hesitate to give it a thrashing when it behaves in a stubborn way or indulges in mischief. Within a short time thereafter, both will forget the incident. While the child finds solace in its mother's embrace, she will fondle it in her arms.

In life it is common to find godly men apparently suffernig while unscrupulous elements who indulge in atrocious acts seem to thrive God's protection is certain to the virtuous. There need be no doubt about it but the only condition is that the help will be subject to the law that one has to experience the consequences of his past deeds. None can escape the same. But god sees that problems of such sincere men who are devoted to him and who seek his guidance are mitigated to a great extent and ensures that such punishments are indeed like buffers to condition their mind and to enable them to face bigger issues. Their agony will not be allowed to go beyond a certain level.

Devoted individuals will therefore hold on to God's feet tighter instead of turning their wrath on Him. And if the desire is fot?? the highest good, we must follow the path of righteousness and shun the path of evil.

## 'CROP AND STOCK INTEGRATION'

## FOR

## PROFITABLE FARMING

**With Best Wishes**

# National Livestock Development Board

**72, Ward Place, Colombo - 7.**

---

பிரதேச அபிவிருத்தி அமைச்சு

## யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்கள்

சுத்தமான நல்லெண்ணெய்
நெல்லிரசம் (தோலகட்டி)
முந்திரிகை ரசம்
மாதளம்பழ பாணம்
பருத்தித்துறை வடை
மோர் மிளகாய்
வடகம்
பனம் பாணி
பனம் வெல்லம்
ஒடியல் மா
புழுக் கொடியல்

மற்றும்

இடியப்ப உரல்
லேடன் சேட், பெனியன் வகைகள்

இவைதவிர்ந்த மட்டக்களப்பு சாரம் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

'கற்பகம்'
244, காலி வீதி,
கொழும்பு - 4.

**Ministry of Regional Development**

## Jaffna Products

**Pure Gingilly Oil**
**Nelli Crush (Tholagathi)**
**Pomegranate Juice**
**Pt. Pedro Vadai**
**Butter Milk Chillies - Vadagam**
**Palmyrah Treacle (Syrup)**
**Palmyrah Jaggery**
**Odial Floor**
**Boiled Odial**
**Grape Juice**

**Also**

**String Hoopper Mould**
**Leyden Shirts & Banians**

And from Batticaloa, Kattankudy Sarongs
AVAILABLE AT

**"KATPAHAM"**
Palmyrah Development Board
244, Galle Road, Colombo - 4

# SRI AUROBINDO

Sri Aurobindo was born in Culcutta on 15th of August 1872. At the age of seven he was sent to England, where he attended St. Paul's School, London and then went on a senior classical scholarship to King's College, Cambridge. After obtaining a first in the Tripos in classics, he passed the Indian Civil Service examination with distinction, but felt no call for the I. C. S. He has acquired mastery over English and proficiency in French, Greek and Latin, besides acquitance with German, Italian and Spanish.

The moment he stepped on the Indian soil after fourteen years in 1893 he had his notable spiritual experience of vast calm. He passed some years in the Baroda State Service as an administrator and a professor. At that time he made a deep study of India's cultural heritage and political conditions In 1906 Sri Aurobindo resigned his position and plunged into political activity for the liberation of the mother land. His daily news paper 'Bande Mataram' quickly became the most powerful voice of the indian Nationalist Movement On 2nd May he was arrested and subsequently prosecuted in the famous Alipore Bomb case. While he was an undertrial prisoner in jail for one year, he had the constant vision of omnipresent God-head. God placed Gita in his hands and made him realise the central truth of the Hindu Religion and gave him this message which he delivered in his speech at Uttarpara (near Culcutta), after his realease on 30th of May 1909.

Within a year of his release, he abandoned the revolutionary path and left British India to spend the rest of his life at Pondicherry in the pursuit of the spirit. In 1914, after four years of silent yoga, he began the publication of a philosophical monthly, the Arya Most of his important prose works appeared serially in the Arya.

Sri Aurobindo lived at first in retirement at Pondicherry with four or five companions, afterwards more and yet more began to come to follow his spiritual path and the Sri Aurobindo Ashram grew around him. On 24th of November 1926. Sri Aurobindo retired into a room to carry on his Yoga work from there, where he remained till he left his body on 5th of December 1950. Th charge of the Sri Aurobindo Ashram was entrusted by him to the Mother from its very begining.

Extract from:
**Sanatan Dharma**
(Eternal Religion)

**Best Compliments**

**from**

# M. A. RAZAK & CO., LTD

Shipping Agents, Charterers, Bunker & Freight Brokers
Travel & Tour Operetors

Head Office:
**No. 7, 19th Lane. (P. O. Box No. 989)**
**Colombo 3 Sri Lanka.**
Tele. 575404, 575045, 575651
596414 Night
Telex: 21296 A/B Marazak CE
Facsimile No. 94-1-575405 (Gp. 1/11)

Wharf Office:
**29 1/11, Gaffoor Building,**
**COLOMBO 1.**
Tele. 547873

Gable: Marazak Colombo.

**Best Compliments**

**from**

# Mercantile Shipping Company Ltd.

**10, Chelsea Garden,**
**Colombo 3.**

Tele. **574872**

எனது பார்வையில்.............

# இந்து மதம்

மனிதன் தனது மனம் போல் வாழ்ந்தால் இந்த உலகில் நிம்மதியிருக்காது ஒழுங்கிருக்காது இதனால் தான் சமுதாயங்கள் சில விதிமுறைகளின்படி வாழ்ந்து வருகின்றன. மனிதன் சிறப்பாக வாழ விதிகள் மட்டும் இருந்து விட்டால் போதாது. சிறந்த சிந்தனையும், சீரிய உள்ளமும், பண்பான இதயமும் தான் அவன் சிறப்பாக வாழ்வழிவகுக்கும் இதையுணர்ந்து தான் அதிகாரமும், பலாத்காரமும் அடைய முடியாத சிறப்பை மதங்கள் பெறுகின்றன,

இந்து மதமும் மக்களை நெறிப்படுத்தும் மதங்களுள் ஒன்றாக மிளிர்கின்றது. தமது மதங்களின் மீது அளவுகடந்த பற்றுக்கொண்டோர் இந்துமதத்தை இகழ்ந்துரைப்பார்கள். தமது மதம் ஒரே மதம் என்று அழுத்திக் கூறுவார், ஆனால் இந்த மதத்தின் சிறப்பே இதில்தான் தங்கியுள்ளது.

ஏனைய மதத்தினரைப் போன்று மதங்களை வெறுத்தொதுக்காது எங்கெல்லாம் அரிய போதனைகளுண்டோ அவற்றையெல்லாம் பரந்த நோக்குடன் திறந்த கரங்களுடன் ஏற்று பெருமை பெறுகின்றது

இந்த மதத்திற்கு புது மெருகு கொடுத்தவர்கள் பலர் அவர்களில் நேற்று வரை வாழ்ந்து என்றும் இந்துக்களின் இதயத்தில் மறையாத இடத்தைப் பெற்ற டாக்டர் இராதாகிருஸ்ணன், இந்து மதம் வெறும் சமயமல்ல அது ஒரு வாழ்க்கை நெறி என்று குறிப்பிட்டார். இறைவனை வணங்குவதால் மட்டும் ஒருவன் இந்துவாக முடியாது; கடமையை செய்பவனே இறைவனின் தொண்டன்; அவனே உண்மை இந்து என்பதை ஏற்றுக்கொள்வதே சைவ சித்தாந்தம். நெற்றிக்கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்பது தமிழர் நெறி போர்க்கோலம் கொண்டால்! போர் களத்த வீரனாக உன்னை இறைவன் படைத்தனன், எதிரிகள் பாசறையில் இருப்பவர்கள் யாராயினும் அண்ணனோ தம்பியோ, ஆதரித்த நண்பனோ, அறிவூட்டிய ஆசானோ கொல்லுவதே உனது கடமை என்றுரைத்தான் கண்ணபிரான், நீதியை நிலை நாட்டு, நேர்மைக்கு வித்திடு, பாசத்தையும், உறவையும் ஒரு பக்கம் தள்ளிவைத்து கடமைகுலதோ அதைச் செய் என்பது தான் எமது தததுவம் எனவே இந்து மதம் முதலில் ஒரு வாழ்க்கை நெறியாகின்றது. பின்னர் பாசத்திற்கும் மேற்பட்ட உண்மையைப் பேணுவதே அந்நெறியின் தத்துவமாகின்றது பின்னர் உலகத்தவரெல்லாம் நம்மவரே என்று எம்மதத்தையும் ஏற்று எத்தனை மதங்களையும் அடக்கிய விருட்சமாகின்றது

எனவே புவிபோல் பரந்து, வானம்போல் விரிந்து, அகழிபோல் ஆழ்ந்து பிரமாண்டமாக கம்பீரமாக எம்மை வழிநடத்தும் ஒரு உலக நெறிதான் இம்மதம் இது எம்மதம் என்று கூறுவதற்கு நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். எனவே இந்துக்களின் பிரசாரங்களைக் கண்டு அஞ்சத் தேவையில்லை ஆலமரம் போலிருக்கும் எமது மதம் எவருக்கும் இடம்தந்து தொடர்ந்து பெருமை பெறும் என்று கூறிக்கொண்டு எனது பார்வையை மூடிக்கொள்கிறேன்.

**K. DUSHYANTHAN**
12 SL L

With the Compliments

of

# VASHICARA ADVERTISING

616 B, Galle Road, Colombo - 3.

Telephone; 589793

With best compliments

from

# EQUITY SERVICES LIMITED.

4th Floor
No. 67, Dharmapala Mawatha,
Colombo - 7

Tele. 549908
Cable. "EQUISERV"

Best Compliments

from

J. B. TRADERS

41, Second Cross Street,

Colombo-11.

T'phone : 5 41127

545921

With Best Wishes

From

STAG BRAND UMBRELLAS

Protects You
From Drenching Storms
and the
Blazihg Sun

Now Available in Ladies, Gents, Childrens & Golf

MACKIE STORES

265, Main Street,
COLOMBO-11.

With the Compliments

of

SIVASAKTHY STORES

Importers General Merchants & Estate Suppliers

No. 240, Keyzer Street,

PHONE; 21636

COLOMBO-11.

With the Compliments

of

KAVICO TRADERS

KTS

Commission Agents & Dealers

189, Keyzer Street,

COLOMBO-11.

கீழ்பிரிவில் முதல் பரிசுபெற்ற கட்டுரை.

# உலகத்தின் மூத்தமதம் இந்துமதம்

இந்துமதமானது கல்தோன்றி மண்தோன்ரு காலத்தில் தோன்றியது. இது ஓர் அநாதியான மதமாகும், இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் சிந்து நதிப் பள்ளத்தாக்குக்கு அண்மையில் மொகஞ்சதாரோ ஹரப்பா என்னும் இரு நகரங்களிருந்தன. அந்த நகரத்தில் இந்து சமயத்தையே போற்றி, சிவனை முழுமுதற் கடவுளாக வழிபட்டனர். இதற்குரிய இலச்சினைகளும் உருவங்களும் இன்றும் இருக்கின்றன.

சிந்து நதியானது இமயமலையிலிருந்து இந்தியாவின் தென்மேற்கில் பாய்கின்றது. இங்கு மூவர் 50 வருடங்களுக்கு முன் ஆராய்ச்சி நடத்தினுர்கள் சேர் வில்லியம் ஜேன்ஸ், சேர் அலெக்சாந்தர் கன்னிங்காம், சேர் ஜேன் ஜேம்ஸ் முதலியோர் இந்து சமயமே எல்லாவற்றிற்கும் மூத்த மதம் என்று ஆராய்ச்சி மூலம் கண்டறிந்துள்ளார்கள். இவர்கள் எடுத்த இலச்சினைகள் உருவச்சிலைகளாவன இன்றும் அழியாமல் இருக்கும் இந்து மதத்தோடு ஒப்பீட்டுப் பார்க்கும்போது இரண்டுக்குமே ஒரு தனி ஒற்றுமை நிலவுகின்றது.

கொம்புள்ள ஒரு யோகியின் உருவச் சிலையும் அவரைச் சுற்றி எருமைகள் பல பெண் விக்கிரகங்கள், பசுவின் முகத்தையுடைய மனிதர்கள் (நந்தி) பசுவின் உடம்பைக்கொண்ட பெண்ணின் உருவச்சிலை (காமதேனு) பலயோகிகளின் சில இலச்சினைகள் முதலியவற்றை இன்றைய இந்து சமயத்துடன் ஒப்பிடும் பொழுது இந்த உண்மை தெளிவாக விளங்கும்.

இந்து சமயமானது பிற்காலத்தில் பல பிரிவுகளுடன் தென்னிந்தியா, இலங்கை, நேபாளம் முதலியவற்றிற்கும் பரவியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

இது சிவனையும் சக்தியையும் முழுமுதற் கடவுளாகக் கொண்டது. ஆதி காலம் தொட்டே சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் என்ற கருத்து இருந்து வருகிறது. மற்றும் இதனுள் இருக்கும் மகிமை காரணமாக இதற்குள் பலர் வந்து புகுந்தனர். அதற்கு உதாரணமாக நாவுக்கரசரை எடுத்துக்கொண்டால் அவர் சமணசமயத்தில் இருந்து இந்து மதத்திற்கு வந்தார். இந்து சமய வேத நூல்களையும் மற்றும் சைவசித்தாந்த நூல்களை எடுத்து பார்த்தால் அவை பழமையானவை. அதில் சங்காலத்தில் நிலவிய பண்பாடு கலாச்சாரம் முதலியவற்றைக் காணலாம்,

இப்படியாகத் தோன்றிய இந்து மதத்தை அழியாமல் இருப்பதற்காகவே, பல நாயன்மார்களும் பெரியார்களும் தோன்றினுர்கள். ஏனென்ருல் சிலர் இந்து சமயத்தின் மகிமை தெரியாமல் வேறு மதங்களின் போதனைகளைக் கேட்டு அதை நாடுகிருர்கள். அதனுல் இந்து மதம் அழிந்து போய்விடுகின்றது. இதை நிறுத்தவே கடவுள் அடியார்கள் தோன்றினுர்கள்.

ஆகவே வரலாற்றுச் சான்றுகள் இன்றைய புதைபொருள் ஆராய்ச்சி ஏடுகள் முதலியனவற்றிலிருந்து நாம் அந்த இந்து சமய கோட்பாட்டைப் பின்பற்றி அதன்படி நடந்து அது அழிவுறும் பாதையில் இருந்து நாம் அதை காப்பாற்ற வேண்டும். அதை உலக நாடுகள் எல்லாவற்றிற்கும் பரப்ப வேண்டும்.

P. Sureshkumar,
Year - 9Q

With the Compliments

of

## Abdeen Jewellers

Specialists In 22 Ct. Gold Jewellery

**"HIRDARAMANI ARCADE"**
**65, Chatham Street,**
**Colombo 1. - Sri Lanka.**

Phone : 3 5 0 4 1
Telex : 21801 A/B Abraj CE

Best Compliments

from

## M. PONNUSAMY & SONS

For
- ★ B. M. C.
- ★ L. D
- ★ Bed ford,
- ★ Lorry Spare parts

**No : 238/19A, Panchikawatha Road,**
**COLOMBO 10.**

**With Best Wishes**

**From**

# DURATION: 40 DAYS
## (daily training)

**Practicals: 25 hrs IBM**

**(betwn. 7 a.m. to 8 p. m.)**

**Lectures: 2 hr/wk**

**Tuts: 2 hr/wk**

**Practs: 1 hr/day**

**Starting: Every Poya**

**Time: 9 a. m.**

**Certificate if successful**

# COMPUTEC

**INTERNATIONAL**

**74, Sea Beach Road,**

**Colombo-11.**

Phone: 33227

மத்திய பிரிவில் முதல் பரிசு பெற்ற கட்டுரை.

# மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

வட வேங்கை முதல் தென் குமரிவரை அன்று நிலைத்தது நமது இந்து மதம். ஆனால் பாரதத் திருநாடு மட்டுமல்லாமல் இன்று உலகெங்கும் நிறைந்து நிற்கிறது சைவநீதி. வாழ்வின் உள்ளுணர்வாக உயிரின் உள்ளொளியாக, பாலில் நெய்யாகவும் விறகில் தீ ஆகவும் இன்று சர்வ உலகையும் ஆட்டிப்படைக்கிறது. நம் மதம் இன்றிலிருந்து 1000 ஆண்டுகளுக்கு முன் சிந்து நதி தீரத்தில் சிந்திய நம் இந்து மதம் இன்று சிந்தாத இடமே இல்லையென்றால் அது சாலவும் பொருந்தும் இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? வற்றாப் புகழும் வயங்கு செழிப்பும் பொருந்திய நம் மதத்தின் அன்பு சார்ந்த கோட்பாடாகும். "அன்பிற்கு அடிபணியாதவன் அகிலத்தில் இல்லைதான்" என்பர் ஞானியர். ஆனால் அன்பையே இறை அடிபணிய சாதனமாக்கியது நம் இந்து மதம். நால்வகை வேதங்களாலும் அவற்றின் சாரமான பன்னிரு தமிழ் திருமுறைகளாலும் அவற்றின் வழிவந்த பதினன்கு சித்தாந்த சாஸ்திரங்களாலும் நம் மதம் போதிப்பது அன்பெனும் கடலில் அருளமுது செய்யும் நம் ஆனந்த நடராஜன் புகழையே!

எங்கே ஒரு மதம், மனித வாழ்க்கையில் ஊடுருவி மானிட வாழ்வின் உணர்வுகளை, கடமைகளை, தியாகங்களை பலாபலன்களைக் கூறி அன்பு, அமைதி, தைரியம் சாந்தம், வீரம் என்ற வாழ்வின் அத்தியாயங்களைப் போதிக்கிறதோ, அங்கு அம்மதம் அகிலப் பொது மறையாகி விடுகிறது. இவற்றின் கண் கொண்டு பார்த்தால் இந்து மதம் ஒரு மதமாகவன்றி ஒரு வாழ்க்கைநெறியாகவே துல்லியமாகப் புலப்படும் அன்பெனும் நெய்யூற்றி அறமென்னும் திரியூன்றி ஆன்மீகம் எனும் தீபச்சுடரின் ஒளியிலே அன்பு சொரூபியான இறைவன் உலகில் ஒன்றிக்க வாழ்வுகாட்டுவதும் வரமளிப்பதும் சைவநீதியென்னும் அற்புத மதமொன்றே! அன்பு எங்குள்ளதோ அங்கு ஈசன் நிறைந்துள்ளான்; இன்று அன்பெனும் அச்சாணியே உலகை உள்ளவாறு சுழல வைக்கிறது. பாற்கடலின் விடமுண்டு தேவ அசுரர்களைக் காத்ததும் ஈசன் அன்பன்றோ ஈசனும் அன்பும் பிரிவில்லா இதே நமது மதத்தின் கோட்பாடு!

இதனையே அன்று திருமூலரும் தம் திரு மந்திரத்தில்;

"அன்பும் சிவமும் இரண்டென்பரறிவிலார்; அன்பே சிவமாவதாருமறிகிலார்

அன்பே சிவமாவதாருமறிந்த பின்; அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே!" என்று இந்து மதத்தின் இனிய பரம்பொருளைத் தெள்ளிய நடையில் தெற்றெனப் புலப்படுத்துகிறார்.

இந்து மதம் "ஒழுக்கத்தின் கண்ணே விளைந்தது" என்றால் அது பொய்யாகா. அன்று நம் வேத இருடிகளும், ஆகம அந்தணரும் இவற்றிற்கு சான்று பகன்றனர். பதி, பசு, பாசம் எனும் முப்பொருளின் தன்மையையும் புகட்டி, நாற்பாதங்களின் வளர்ச்சியையும் முத்தி நிலையையும் அன்பு வழிகளையும் பரமார்த்தங்களின் இயல்பையும் விளக்கி இறையருளில் சங்கமிக்க வைக்கிறது சைவநீதி. எத்தனை நீதிகளிருப்பினும் வாழ்வின் ஒளியை உணர்த்தி வழியைக் காட்டி மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழவைக்கும் சைவ நீதிக்கு இணையாகா!

இயற்கையில் இறைவனைக் கண்டு பரவசமடைந்தது நம் இந்து மதம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது." இதனை வாழ்வில் கண்டவர் நம் மதக் குரவர்கள். இவ்வாழ்க்கை நெறியால் அன்று அவர்களும் வாழ்ந்தார்கள்; இந்து மதமும் வாழ்ந்தது; இன்று நம்மையும் வாழவைக்கிறார்கள்; இயற்கையில் அப்பனைக்கண்டு ஆனந்தத்தில் பரவசமடைந்து சம்பந்தரும்!

"பண்ணும் பதமேழும் பல வோசைத்தமிழவையும்" எனும் திருவீழி மிழலைத் திருப்பதிகத்தில், இறைவன் பஞ்ச பூதங்களாகவும், விண்ணாகவும், மண்ணாகவும் தமிழின் ஓசையாகவும் சப்தஸ்வரங்களாகவும், சூரியன், அக்கினி, சந்திரன் ஆகிய மூன்று சுடர்களாகவும் நின்றும் நம் முயிரின் உள்ளூற்றாகவும் நிறைந்து அன்பினாலே உலகை ஆட்சி செய்கிறான் என்று சிவமாந் தன்மையை எடுத்துக் கூறுகிறார்.

அன்பையும் நம்மதத்தையும் என்றும் பிரிக்க முடியாது. அன்பிலே விளைவது பாசம்; பாசத்தில் மலர்வது கடமை; கடமையில் ஜனனிப்பது ஒழுக்கம். பின்னைய மூன்றும் அன்பின் கண் பிறந்தவை; இவையின்றி வாழ்வில் வளமில்லை, மண்ணில் புகழில்லை; விண்ணிலும் சிறப்பில்லை. இதனையே ஆதியும் அந்தமுமில்லாத சைவப் பெருநீதி எடுத்துக் கூறுகிறது. இன்று அகில உலகமும் சைவநீதியிடம் சரணடைந்து விட்டது.

''தாயினும் நல்ல தலைவனாக'' நின்று நம்மைச்சீராட்டிப் பாதுகாப்பவன் நம் ஈசனன்றோ: எனவே அவன்பால் அன்பு கொண்டு அவனை வழபட்டு உய்வது நாய் செய்ய வேண்டிய பிரதிக் கடமை என்கிறார், மணிவாசக சுவாமிகள். சைவநீதி வாழ்க்கை நெறி அதுவே அன்பு நீதி ஆயிரத்தெட்டு அண்டங்களினதும் தருமநெறியும் அதுவே. எனவே சாத்துவீகம் எனும் நற்குணம் மேலோங்க சகல சீவராசிகளின் அகத்திலும் உள்ள இறைவனை அன்பினால் அருச்சித்து கருணையினால் அபிஷேகித்து தியாகத்தால் வழிபட்டு அறத்தினால் ஒழுகி நின்று பேரின்பப் பெருவாழ்வடைவோம்; அதுவே சைவநீதி; அதுவே நம் முன்னோர் கண்ட நெறி; அதுவே நம் வாழ்க்கை வழி! இதுவே என்றும் இந்து மதத்தின் தாற்பரியம்.

சைவநீதி வாழட்டும்: அகில உலகமும் நலம் பெறட்டும்; எனவே மீண்டும், மேன்மை கொள் சைவநீதி விளக்குக உலக்மெல்லாம்!

சுபம்!

நா. விக்னேஷ்
வருடம் 11Q

---

எமது

விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்

**With**

**the Best Compliments**

**from**

SANGAR SONS PRINTERS

**98, Vivekananda Hill,**

**Colombo-13.**

**Telephone:**

**547335**

**With the Compliments**

**of**

# THIVAGAN COMPANY

**General Merchants & Commission Agents**
**for Local Produces**

**No- 208, 4th Cross Street,**

**Colombo-11.**

Telephone: 28556

**With the Compliments**

**of**

# V. KANAGALINGAM PILLAI & SON

**General Merchants**
**Distributors of Kanagalingam Cigars**

Tele { Grams; KANCIGARS
Phone; 25883

**TEA**

**No. 17, St. John's Road,**
**COLOMBO-11.**

Best Compliments

from

# OPATHA & CO.

**General Merchants Importers**

**&**

**Commission Agents**

**13, & 15, St. John's Road,**

**Colombo-11.**

T'grams : OPULENCE

T'phone : 25685

Best Compliments

from

# Lanka Products Trades

**Dealers in Groceries, Dryfish**

**&**

**Commission Agents**

**21, St. John's Road,**

**Colombo-11.**

Phone : 26740

# அன்பும் அறமும் இந்து மதத்தின்

# உயிர்நாடிகள்

ஒரு மரத்தில் லட்சக்கணக்கான இலைகள் இருக்கின்றன. ஆனால் மரம் ஒன்றே; அது போல இறைவனும் ஒருவரே. ஆயினும் மனிதர் மனங்கள் பலதாய் இருப்பதால் மதங்களும் பலவாக இருக்கின்றன. தன்னுயிர் போல் மண்ணுயிரையும் நினைக்கும் பழக்கத்தை எல்லோரும் வளர்த்துக் கொள்வோமாயின் எல்லோரும் ஒரே குலம்! ஒரே இனம்! என்ற ஞானம் பிறக்கும். அந்த ஞானம் பிறந்துவிட்டால் வாழ்வில் கவலை ஏது? துன்பம் ஏது?

பூவில் மணம் எப்படி எம் கண்ணுக்கு தெரியாமல் இருக்கிறதோ, அதே போன்று தான் இந்து மதத்தில் அன்பும், அறமும் எமது கண்களுக்குத் தெரியாமல் இருக்கின்றன. மக்கள் அறநெறிகளை பின்பற்றித் தம் வாழ்வினை வளம்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் ஆலயங்களை உருவாக்கும் அதே நேரத்தில் அன்பு நெறியையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியான இறைவனைப் போன்றே இந்து மதமும் தொன்மையுஞ் சிறப்பைத் துலக்குகின்றன. இந்துமதத்தின் தொன்மையைக்கால வரையறைக்குள் அடக்கிவிட முடியாது. இதுவே இந்து மதத்திற்குரிய ஒரு தனிச்சிறப்பு, அன்பின் தனிச்சிறப்பை திருமந்திரம் பின்வருமாறு கூறுகின்றது

''அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே''

இந்துமதம் அன்பின் வடிவமாக இறைவனைக் காட்டுகின்றது, எல்லையற்ற அன்பின் சின்னமாக உள்ள இறைவனை எல்லா மதங்களும் தத்தம் சொத்தாகக் கருதுமாயின் மதமாற்றம் இவ்வுலகத்தில் இருந்து பூண்டோடு அழிந்துவிடும்,

இன்றைய கணக்கெடுப்பின்படி உலகத்தில் 500 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழுகிறார்கள். இவர்கள் எல்லோரும் உருவத்தில் மட்டுமே மனிதர்கள். ஆனால் உள்ளத்தால் எத்தனைபேர் மனிதர்களோ யானறியேன், இறைவனிடத்தில் அன்பு செய்வது என்றால், இறைவனிடம் உறைவிடமாகிய உயிர்களிடத்தில் செலுத்துவதே ஆகும். உயிர்களிடத்தில் அன்பில்லாதவர் இறைவனிடத்திலும் அன்பு கொண்டிருக்கமாட்டார்கள்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்''

அதாவது பிறப்பு வேறு. செயல் வேறு; செயலை பொறுத்தே சிறப்பு என்கிறது திருக்குறள்

நற்குணமுடையவர்கள் என்ற பெருமைக்கும், துர்க்குணமுடைவர்கள் என்ற சிறுமைக்கும், அவரவர்களுடைய செய்கைகளே மாற்றறியும் உரைகலலாகும், குணம், குற்றம், பெருமை, சிறுமை என்பதெல்லாம் அருங்குணமாகிய அன்புள்ளவராக இருப்பதையும், இல்லாததையும் பொறுத்ததே. ஆகையினால் அன்பில்லாதவர்களிடத்தில் நம்பிக்கை வைத்துவிடக்கூடாது; மனித வர்க்கத்தை நன்கு உய்த்துணர்ந்த பெரியார் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்.

''மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு
அநேக குல மனிதருண்டு.
மனிதரிலும் மனிதருண்டு வானவரும்
மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார் முன்னோர்''.

மனித கூட்டத்துக்குள்ளே மனிதரைத் தேடி அலைந்த மகத்தான மக்களுடைய சரித்திரங்களும் உண்டு. உண்மை மனிதனைக் காட்டும் கண்ணாடி ஒன்று கண்டு பிடிக்கப்படுமானால் நம்மவரில் எத்தனை பேர் மனிதப் பண்போடு வாழுகின்றோம் என்பதை விரல் மடித்தே எண்ணிவிடலாம். உலகத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் மெய்ஞான ஆராய்ச்சி குன்றி வருகிறது. அன்பு சுருங்கி அறிவு வளருகிறது. மனிதன் பறவை போல் பறக்கிறான்; மீனைப்போல் நீந்துகிறான்; ஆனால் மனிதன் மனிதனைப்போல் வாழவில்லை. இஃது இன்றைய உலகப் பொதுநிலை எனவே, தான் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் ''ஐம்புலன்களையும் அடக்கத் தெரிந்தவனே பூரண மனிதனாகின்றான்''.

உயிருக்கு இயல்பான பண்பும் அன்பும் குழந்தைகளிடத்தே உண்மையாகக் காணலாம். உதாரணமாக பணக்கார வீட்டுக் குழந்தை ஏழை வீட்டுக் குழந்தையோடு அன்பு பாராட்டுகிறது. ஆனால் ஆணவமுமிக்க பெரியோர்கள் அவ்வன்புக்குத் தடை விதிக்கின்றார்கள். இவர்களைத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்,

''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

தேவார திருவாசகங்களை அருளி, அறநெறியை வளர்த்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக நாயனார் ஆகிய நால்வரையுமே சமயக்குரவர்களாகப் போற்றுகின்றோம். சைவ பாரம்பரியத்தினைக் காத்து, அன்பெனும் பாதையிலே அறம் வளர்த்த அருளாளர்கள் இவர்கள். இறைவனை ஞானத் தந்தையாகக் கண்டு தொண்டு செய்தார் சம்பந்தர். நாவுக்கரசரின் நனிந்த உள்ளம் அவரின் தேவாரங்களின் வழியாக எங்கள் உள்ளங்களையும் உருக்கி அன்பு நெறியின்பாற் செலுத்த உதவியது. மாணிக்கவாசகரின் திருவாசகங்களினாலே தெய்வீக வசமாகி, உள்ளத் தூய்மையை பெறுகின்றோம். இவ்வாறான அன்பு நெறியின் வழிநின்று ஒழுகுவதன் மூலம் எங்கள் உள்ளம் தூய்மைமை பெறுவதுடன் அறிவும் வளர்கின்றது. இந்து உள்ளத்து உறுதியும் அன்பும் பெருகப் பெருக உலகிலே சமரசமும் உயர் அறமுந் தழைக்கின்றன. சமூக வாழ்வு அர்த்தம் பெறுகின்றது.

அறம் செய்வதனால் நன்மைகள் உண்டாகும் என்பது எல்லாச் சமயத்தாரும் ஒப்புக்கொண்ட முடிவாகும். அதை மறந்துவிடுவதால், அந்த நன்மைகள் உண்டாவது தானே இல்லாமற் போகும். ஆனால் பல நாள் அறம் செய்கிறவனும் கூட ஒரு நாள் அதை மறந்து கடமையில் தவறுவானாகில் அந்தச் சமயம் பார்ததுக் காத்துக் கொண்டிருக்கின்ற அறவாழ்வின் பகைவர்களாகிய தூர் எண்ணங்கள் கொண்டவர்கள் புகுந்து அது வரையிலும் அவன் செய்த அறங்களின் பயன்களை அழித்துவிட்டு, கூடிய தீய ஒழுக்கத்திற்கு ஆளாக்கி விடலாம். இதனையே பின்வருமாறு சங்கக்கால பெரியார்களும் நூல்களும் அறத்தின் பெருமையை கூறுகின்றன.

''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்''
எனச் சங்க நூலும்

''அறநெறி பிழைத்தார்க்கு அறம் கூற்றாலை
என்று சிலப்பதிகாரமும்

''அருள் தரும் திறத்து அறனன்றிவலிய துண்டாமோ''
எனக் கம்பரும்

''தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் தலைகாக்கும்''
என்று வியாசரும் அருளினார்.

அறமாகிய நல்ல காரியத்தைச் செய்வதைக் காட்டிலும் நல்லது வேறில்லை அதை மறந்து விடுவதைக் காட்டிலும் கெடுதி உண்டாக்கக் கூடியதும் வேறில்லை. இதையே திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகின்றார்.

''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு''

இந்து மதக் கடவுளின் அன்பையும், அருளையும், கண்டறிந்த அல்லது கேட்டறிந்த நாயன்மார்களும், பெரியார்களும் தேவார திருவாசகம், திருமூலமந்திரம் திருப்புகழ் போன்ற பன்னிரு திருமுறைகளைப்பாடிப் போற்றி இறைவனைத் தரிசித்துள்ளார்கள். எனவே இந்து மதம் சமய வழிபாட்டில் நற்செய்கை, நல்வாய்மை, நல்லுள்ளத்தூய்மை போன்ற கருத்துக்களை போதித்து மக்களை நல்வழிப்படுத்த வழிகோலியுள்ளது. என்றால் அது மிகையாகாது. வீரம் செறிந்த பக்தியின்மேற் பாட்டிற்கு சிறப்பியல்பாக ''இராவணன் மேலது நீறு'' என்ற தேவாரத்திருப்பதிகமும், அறத்திற்கும், வாய்மைக்கும் சிவனின் பாடலெனத் தெரியாத நக்கீரர் குற்றங்கண்டு கடிந்துரைந்து பின் காப்பாற்றப் பட்டமை போன்றவையும் இந்துமதத்தின் திறமையை புலப்படுத்துகின்றன என்றால், அத இந்து சமயத்தவர் களிற்த அளித்த ஒரு வரபபிரசாதம் என்றே கூற வேண்டும்.

ஆகவே மதங்களின் உயிர்நாடிகளாக அன்பும் அறமும் இடம்பெற்றிருக்கின்றன என்பதில் ஐயமே இல்லை. வாழ்க அன்பும் அறமும் இவ் வையகத்துள்!

த. நிலவொளிகாந்தன்
Year 13M

With Best Wishes

From

# Prestige Enterprise

**Printers & Stationers**

**27/15, Public Market Building,**
**Negombo Road,**
**Peliyagoda.**

**For a professional service**

**in Clearing Forwarding and Transport**

**Contact**

# Freight Services (Private) Limited

**74, Dawson Street,**
**COLOMBO-2.**

T'phone : 546498 547455, 545592, 545593

# 1937 - 1987

## GOLDEN JUBILEE YEAR

# INDIAN OVERSEAS BANK

Good people to grow with

Main Office

**45, JANADHIPATHI MAWATHA, COLOMBO - 1.**

F. C. B. U,

**13 3/3, Sir Baron Jayatilake Mawatha, Colombo-1.**

Branch

**61, Anagarika Dharmapala Mawatha, Matara.**

*YELLOW ADVERTISEMENT*

WHERE YOU SEE OBSTACLES

WE MAY SEE PATHS —

*SOLVE*

YOUR LIQUIDITY PROBLEMS WITH THE HELP OF

# SHABRA UNICO FINANCE LIMITED

YOUR FRIENDS IN FINANCE

FOR :

**Hire purchase financing and leasing of vehicles.**
**Trade and Import Loans**
**Pledge Loans**
**Mortgage Loans**

*CALL ON US*

**SHABRA UNICO FINANCE LIMITED**
**61, NEW BULLERS ROAD,**
**COLOMBO 4.**

Telephone: 589310, 500576 T'GRAMS: Unishab

*A STABLE FRIEND IN A CHANGING ECONOMY*

## இதழாசிரியர் குழு:

முதல் இதழாசிரியர் :
இராஜகோபாலன் இரவீந்திரன்

சிரேஷ்ட துணை இதழாசிரியன் :
நிரஞ்சன் விஜயநாதன்

கனிஷ்ட துணை இதழாசிரியர் :
துஷ்யந்தன் கமலாஷரன்

## Editorial Board:

**Chief Editor:**
**Rajagopalan Raveendran**

**Senior Sub Editor:**
**Niranjan Wijeyanathan**

**Junior Sub Editor:**
**Dushyanthan Kamalaharan**



## வெளியீட்டாளர்:


இந்து மாணவர் மன்றம்
றோயல் கல்லூரி,
கொழும்பு



## Published by


**Hindu Students' Union**
**ROYAL COLLEGE**
**COLOMBO**

# KALAIMAGAL VIZHA ORGANISING COMMITTEE (1986-87)



**Seated from L to R :** S. Balakrishnan, S. Sathiendran. S. Lingan, N, Wijenathan
**Standing 1st Row L to R :** B, Balaratnaraja, S. Prabahar. Sutharshan, N. Viknesh, M. Sivabalaseelan, M. Thiruvasakar, Surenthiran, Narenthiran.
**2nd Row L to R :** V. Sugatheswaren, A. Baskaran, V. Amarneethee, Krishnakumar, Thayaparan, S. Arijuna, T. Nilavolikanthan, R Rasiah, Inbakumar
**Absentees :** A. Balaratnaraja, S Sureshkumar, G. Balabaskaran


# ROYAL COLLEGE, HINDU STUDENTS' UNION
# (1986-87)




**Seated from L to R** Mrs Rajkumar (Teacher-In-charge). Miss. S. Chelliah (Senior Teacher-in-charge) S Sathiendran (Secretary), Mr B. Suriyarachi (Principal), S. Lingan (Student Chairman) R. Raveendran (Chief Editor, Sivasakthi 87) Mr. Shanmugalingam (Teacher-in-charge)

**Standing from L to R:** R. Janahan, Dushyanthan, K. Pradeeban, S Nishankar, K. Sivakumar, V Devadas, V. Swarnaraj, N. Wijevanathan.

றோயல் கல்லூரியில் இனிது நிறைவேறிய
பூஜையின் போது எடுக்கப்பட்ட படங்கள்





*YELLOW ADVERTISEMENT*

**With the Compliments**

**of**

# TRUST GROUP OF COMPANIES

Mutual Investments and Finance Ltd.

Trust Travels & Tours Ltd.

Trust Marketing Services (Pvt) Ltd.

Trust Financial Services (Pvt) Ltd.

Trust Travel Service

Trust Recruitment Services

Trust Cargo

**HIRDARAMANI ARCADE,**

**65, Chatham Street, Colombo - I.**

**T'Phone: 548409, 540283 - 6 (4 Lines)**

**Telex : 22238 TRUST CE**

With the Compliments

of

Saraswathie Lodge

191 & 193, Galle Road, Bambalapitiya,
Colombo-4.

Phone : 581913

With Best Compliments

of

HONEY TEX

Wholesale & Retail Textiles Dealers

195, 2nd Cross Street,
Colombo - 11
Sri Lanka

Phone: 545916

With best compliments

from

HARIKA TRADE CENTRE

Dealers of all kind of Elcctrical items and Gift items.

No. 328 B, Galle Road, (adjoining Omega inn Hotel)
COLOMBO - 6

With the Compliments

of

YAMEEN PRINTERS

OFFSET & LETTERPRESS PRINTERS

17, Hultsdorf Street,

Colombo-12.

Telephone : 547413, 34095, 27918

Donated by

Ceylon Textile Corporation

100, Main Street,

Colombo-11.

Telephone; 24562

Show Room:

STAR TOWER

Galle Road, Colombo - 3.

Telephone; 580738

**With Best Wishes**

**From**

# REMECHANS

**Dealers in Photographic Goods,**

**Equipments and Fancy Items**

**163/1 A, First Floor, Main Street,**
(City Paradise Super Market)

**COLOMBO-11.**

**With the Compliments**

**of**

## Chitra Video

**48, Kotahena Street,**

**Colombo-13**

**Best Quality Film**

**Tamil & English**

**With Best Compliments**

**of**

## New Alexandra
## Gram Stores

**No. 42, Galle Road,**
**Wellawatta.**
**Colombo-6.**

Telephone: 585927

**Best Compliments**

**from**

22 CT. ONLY

SUJITHA JEWELLERS

**47-A, Sea Street,**
**Colombo-11.**

Phone : 24630

**Best Compliments**

**from**

ARASAN COMPANY

**General Rice Merchants**

**72-A, 4th Cross Strreet,**
**Colombo-11.**

T'phone : 29407
T'grams : "HAPPY"

# அண்டம் புகழும் அகிலத்தரசி
# ஆதரித்தருளும் அன்பு சொரூபி

''அம்மையே அப்பா!!'' என்று ஆரம்பித்து தமிழ் வேதம். அதன் அரவணைப்பில் இன்று நிற்கிறது இந்து மதம். வேதங்கள் ''சாமகானப் பிரியே'' என்று வணங்குகின்றன. அவற்ருலும் இந்துமதம் இயங்குகிறது. ''அம்மையே'' என்றும், ''சாமகானப் பிரியே'' என்றும் நாம் இறைவனைச் சக்தியாகவும் வணங்குவதன் அர்த்தம், இந்து மதத்தின் இயக்கத்திற்கு மட்டுமல்ல, அகில அண்டங்களின் இயக்கத்திற்கும் ஊற்ருக நிற்கும் பராசக்தியைக் குறித்துத்தான். ஒரு குழந்தை முதலில் பிறந்தவுடன் அது உதிர்க்கும் மழலை ''அம்மா'' என்று தான். ஒருவன் இறக்கும் போது அவனது உயிர் ஓம்பும் நாமமும் அதுவே. இவையெல்லாம் நாம் நினைத்து இயற்றும் காரியங்களல்ல. இவை நம் ஆன்மாவின் அடியில் இருந்து ஏதேச்சையாக வெளிவரும் உச்சரிப்புகளே, இவை விளக்குவது எதனை? இவ்வுலக இயக்கங்களுக்கெல்லாம் அறிந்தோ அறியாமலோ அநாதியே ஆக்கமாயும் அழிவாயும் நிற்பது அன்னை ஆதி பராசக்தியே என்பதனை,

அன்னை பராசக்தியே அகில உலகின் ஐம்பூதங்களுக்கும் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் பன்னிரு ஆயிரம் சூரியர்களுக்கும் சகல சக்திகளுக்கும் ஊற்ருக நிற்கிருள், என வேதங்கள் போற்றுகின்றன. ''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்பது சைவ சித்தாந்தக் கருத்து அன்னையே பரிணமிக்கிறது'' ''அர்த்த நாரீஸ்வரர்'' (மாதொரு பாகன்) இறைத் தோற்றம். இவ்வாறு உலகை இயக்குகிருள். திருவருட் சக்தி ஓர் அணுவிலே எவ்வாறு இலத்திரன்கள் வேகமாக இயங்குகின்றனவோ அவ்வாறே சாந்தமும் தியானமும் கொண்டு ஞான சொரூபியாக சிவன் அருகில் வீற்றிருக்கும் சக்தியானவள் சக்தியாக இயங்கி அகிலத்தை இயக்கி அதர்மம் அகற்றி அருள் புரிகிருள். இறைவன் தந்தை போல் உயிர்கள் அணுகுவதற்கு அரியவராக இருக்க, சக்தி தாய் போல் உயிர்கள் அணுக எளியவளாக எல்லாம் அளிப்பவளாக இருக்கிருள். அவளே வீரத தாயாகவும், செல்வத் திருமகளாகவும், கலைக் சரசியாகவும் உள்ளார்.

சக்தியின் இத் தன்மையையே,

''சக்தியாய் விந்து சக்தி யாய்மனோன் மணிதனுகி ஒத்துறு மகேசை யாகி யுமைதிரு வாணி யாகி வைத்துறுஞ் சிவதிக் கிவ்வன் வருஞ்சக்தி யொருத்தி யாரும் எந்நிற நின்ருன் ஈசன் அந்நிறம் அவளும் நிற்பள்'' என சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியார் தெளிவு படுத்துகிருர்.

அன்னையின் அருளைக் கண்டோர்; அதிசயித்தோர்; அனுபவித்தோர்; பல்லோர். வட இந்தியாவில் குத்தர் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றுவரை அன்னைக்குக் கோயிலெடுத்தலும் அவளை வணங்குதலும் சிறப்பாக விளங்குகிறது. அன்னையையே திருவருளின் மூலமாகவும் நம்பிக்கையின் துருவ நட்சத்திரமாகவும் அபயத்திருவாகவும் முழுமுதற் தேவியாகவும் வழிபடல் ''சாக்தம்'' என்னும் 'வாமம்'' என்ற பதமாகக் குறிக்கப்படுகிறது. எனினும் பிற்ககலத்தில் இது இந்து மதம் எனும் பரந்த மரத்தின் ஒரு கூருக நின்று இயங்குகிறது; கி. மு. ஐயாயிரம் ஆண்டு காலங்களில் இருந்த மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிக புதைபொருள்களில் கண்டெடுக்கப்பட்ட சான்றுகள் அன்னை வழிபாட்டின் தொன்மையை வெண்களியுகத்திற்கும் நம்மை இட்டுச் செல்கின்றன. இன்று வட இந்திய அசாமிலும் வங்காள தேசத்திலும் சக்தி வழிபாடு அதிகம் செறிந்து காணப்படுகிறது. இன்று இந்தியாவிலே மதுரையில் மீனுட்சியாகவும், காஞ்சியிலே காமாட்சியாகவும் காசியிலே விசாலாட்சி ஆகவும் இலங்கையில் நயினுதீவில் நாகபூஷணியாகவும், நல்லூரில் வீரமாகாளி அம்மனுகவும், தெல்லிநகரில் துர்க்கையாகவும், மாத்தளையில் முத்து மாரியம்மனுகவும் இருந்து தேன் பொந்தில் தேன் போன்று அருள் சுரந்து தனது குழந்தைகளான எம்மைக் கடாட்க்ஷத்தருள்கிருள். மதுரை மீனுட்சி அம்மன் ஆலய மூலதனத்திற்கு மேல் புது வருடத் தினத்தன்று சூரியன் உச்சங்கொடுத்து அன்னையின் சக்தியை வருடா வருடம் பிரதிலிக்கிருன். இது மட்டுமல்லாமல் எங்கெங்கே சிவபெருமான் இருக்கிருரோ அங்கெல்லாம் சக்தி இருந்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி கோலுகிருள்.

இதனையே உமாபதி சிவமும் திருவருட் பயனில் பழுத நிலையில், ''தன்நிலைமை மன் உயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்;'' என வர்ணிக்கிருர் அன்னை தன்னை நம்பியவர்களை என்றும் கைவிடாத தன்மையான அவள் 64 சக்தி பீடங்களை பூவுலகில் தனக்குரித்தாக்கி உள்ளாள்.

PTO

அன்று இந்திய மண்ணில் வாழ்ந்த அபிராமிப் பட்டர் சக்தி உபாசனை மிக்கவர். எனினும் அவர் இறைவி மீது கொண்ட அளவற்ற பக்தி அவரைச் சமூகத்தின் முன் மூடனாகவும் அறிவிலியாகவும் எண்ணச் செய்தது. ஒருகால் மன்னன் அவரைச் சந்தித்து பௌர்ணமி தினம் எப்போது என்று கேட்க அபிராமிப் பட்டரும் அன்னையை எண்ணியிருந்து கொண்டு தவறுதலாக அன்றைய தினமான அமாவாசைத் தினத்தைப் பௌர்ணமி என்று மன்னனிடம் கூறினார். எனினும் தெய்வாதீனமாக தன் பிழையை விரைவில் உணர்ந்த ''பட்டரும்'' தான் மன்னனிடம் பெறப்போகும் தண்டனையும் நாட்டில் பெறவிருக்கும் அவமதிப்பையும் எண்ணி எண்ணி வருந்தினார். எனினும் நிலைதளராத பட்டரும் அன்னையை நோக்கி அபிராமி அந்தாதியைப் பாடத் தொடங்கினார். தனக்கு அன்னை அருளாவிடத்து இரவோடிரவாக நாட்டைவிட்டு வெளியேறவும் தீர்மானித்தார். எனினும் பக்தர் கண்ணீர் சிந்த சிறிதும் பொறுக்காது அன்னை தன் கழுத்தில் அணிந்த ஆபரணங்களில் ஒன்றைக் கழற்றி ஆகாயத்தில் எறிந்தார். எங்கும் ஒரே ஒளிமயம்; அமாவாசை அகல அங்கே பூரண சந்திரன் குளிர்ந்து எறித்துக் கொண்டிருந்தான். அபிராமிப் பட்டர் குறை நீர்த்தது. எல்லோரும் மன்னனும் தேவியின் அருளை நினைந்து மனமார உருகினார். அன்று அன்னையின் பேரருளினால் இன்று நமக்குக் கிடைத்தது அபிராமி அந்தாதி; தன்னை உய்வித்த தேவியை அபிராமிப் பட்டரும்,

''தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே கனம் தரும் பூங்குழலாள் அபிராமிக் கடைக்கண்களே,''

—என்று புகழ்ந்து பரவசமடைந்தார்.

அன்று கண்ட அன்னையின் அருள் என்றும் மிகுந்த பிரவாகத்துடன் உயிர்கள் மீது பாய்கிறது, வீரத்தைக் கேட்டால் வீரத்துடன் உறுதி, தைரியம், அஞ்ஞா நெஞ்சம் எல்லாவற்றையும் அன்னை தருவாள். செல்வம் கேட்டால் சகல ஐஸ்வரியங்களும் நம்முன் படைப்பாள். அன்னையிடம் கல்வியைக் கேட்டால் அறுபத்து நான்கு கலைகளையும் நம்மில் ஊற்றெடுக்க வைப்பாள்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அன்னையை வழிபட ஒன்பது தினங்களைத் தந்தாள். தசாவது தினத்தில் ஆணவம் என்றும் இருளைப் போக்கி மாயையும் கன்மத்தையும் ஒடுக்கி வரமளிப்பாள். பத்தாம் தினம் ''மகாநோன்பு'' என்னும் மானம்பூ என்றும் அழைக்கப்படும். மற்றும் கேதாரகௌரி விரதம், வரலட்சுமி விரதம் என்ன அன்னை நமக்கீந்த அருட் தினங்களாகும். இத் தினங்களின் மகத்துவத்தால் அன்னை நமக்கு நிலையான அமைதியையும் சுபீட்சத்தையும் அருளையும் இன்று தந்து விட்டாள். இதோ இன்று இன்னோர் கலைமகள் விழாவும் கண்டு விட்டோம். அன்னையின் கடைக்கண் கடாட்சமும் பெற்று விட்டோம். அகில உலக சர்வேஸ்வரியான அன்னை ஆதிபராசக்தியை அனுதினம் ஆராதித்து அவள் பதம் பணிபவர்கள் சித்தியும் புத்தியும் வித்தையும் பெற்று ஆன்ம ஞானம் கைகூடுவர் என்பது தாற்பரியம். இதுவே நம் இந்து உலகம் கண்ட உண்மை.

சிம்மாசனத்தில் நீயிருக்க,
உன் பாதங்களிலே நாமிருந்தோம்!
அண்டம் தோறும் நீயியங்க.
ஆதி சக்தியே உன் பதம் பணிந்தோம்!
அண்டம் புகழும் அகிலத்தரசி நீயே நம்மை
ஆதரித்தருளும் அன்பு சொருபியும் நீயே!
சர்வ சக்தி! சர்வ மங்களம்!

நா. விக்னேஷ்,
வருடம் 11O

**With the Compliments**

**of**

# COBAMILS LIMITED

**IMPORTERS & EXPORTERS**

**STOCKISTS OF**

- Welding Electrodes
- Electrical Motors
- NTN Ball & Roller Bearings
- Rice Huller Rubber Rollers
- Chinese Rice Hullers
- V Belts
- Welding Equipments

**54-3/3, York Street,**
**Australia Building,**
**Colombo 1.**

Cables : "COBAMIL" Colombo
Telex : 21381/AB COBAMIL CE
Telephone: 24591, 24596, 547215

மேற்பிரிவில் முதல் பரிசுபெற்ற கட்டுரை

# இந்து சமயம் ஒரு பண்பட்ட வாழ்க்கை முறை

இந்து மதத்தான் என்னும் சிறப்பத்தை ஒதுக்கும் உளிகளாகக் காணப்படுபவை ஒழுக்கம், நல்லறிவு, நற்சிந்தனை, நற்பழக்கம் போன்றன ஆகும் இவ்வுலகில் பூத்திடும் மனிதனிடம் அவன் யார்? எனக் கேட்டிடும் இந்துமதக்கருத்துக்கள் பரவசத்தில் ஆழ்த்துவன. மனிதன் யார்? ஒவ்வொருவனிடம் ஒவ்வொரு தயாரிப்பு விடை இருக்கின்ற போதும் மனிதன் ஒரு விடைக்குள் அடங்குவானு? பிரச்சனை என்ன வென்றுல், மனிதன் விடையிலும் இல்லை, விடையாகவுமில்லை. வினவாக இருக்கின்றுன். இவ்வாறு மனிதனை மனிதனே தேட வைக்கும் இந்து மதம், அவற்றினுல் உண்டான ஆத்மீக வாழ்வில் அவனை வாழவைக்கிறது. இவ்வாறு உண்டான பண்பாடே இந்து மதத்தானுடைய வாழ்க்கைத் தூண்களாகும். இவ்வாறு உயர்ந்த இப் பண்பாட்டுக் கோட்பாடானது ''அணுவைத் துளைத்து ஏழ்கடலை புகட்டி குறுகத்தறித்த'' குறள் போன்றது.

மந்திரம், பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரணியகங்கள் போன்றவற்றை எடுத்து நாம் ஆராயபுகுவோமானுல் இந்துமதத்தானுடைய பண்பட்ட வாழ்க்கை முறையானது நான்காக வகுக்கப்பட்டு, அவை ஒன்றிலிருந்து ஒன்று கனிந்து செல்வதை அவதானிக்கலாம். இவ் வாழ்க்கை முறைமையின் முளைப்பருவமாகிய மாணவப் பருவத்தில் உள்ளோர், நன்னூல்களைக் கற்றறிதல், உண்மையைப் பேசுதல், தர்மம் தவருது நடத்தல், அறவாழ்க்கை, இறை வணக்கம் முதலிய பல்வேறு கடமைகள் கூறப்படுவதனுல் இந்து மதக் குழந்தையிடத்தே அன்பும், அறமும், உருவெடுக்கிறது. இதனுல் பிறவுயிர்களிடத்தே அன்பும், பண்பும் பிறக்கின்றது.

''அன்பும் பண்பும் இல் வாழ்க்கை பண்பும்-
பயனும் இல்'' என சிறப்பாக விதந்துரைத்தலைக் காணலாம். அதுவே இரண்டாவது நிலையாகிய இல்லற வாழ்க்கையை எடுத்துச் செல்கின்றது. வேத சங்கிதைகள் இங்கு இல்லறத்தை நல்லறமாகுமாறு வாழச் செய்கிறது. மேலும் அவனது கடமைகள் தென்புலத்தார். தெய்வம், சுற்றம், நலிந்தோர் ஆகியோர்ருக்கு கிளைவிட்டு இலை பரப்பிச் செல்வதோடு தன்னையே அவ்வறத்தில் வாழ வைக்கின்றது. மேலும் இல்லற வாழ்வானுடைய கோப்பெரும் கடனுக விருந்தோம்பி உபசரிப்பது இடம் பெறுகின்றது. இதனையே வள்ளுவர்,

''விருந்தோம்பி இல் வாழ்தெல்லாம் வாழ்க்கை இருந்தோம்பி வேளாண்மை செய்யற் பொருட்டு'' எனக் கூறி உள்ளார்.

இவ்வாறு இல்லற வாழ்க்கையை மெருகூட்டும் விடயங்கள் பல கூறப்பட்டுள்ளன. பின் இதுவே துறவறத்தின் ஆரம்பக் கட்டமாக அமையும். துறவறமானது ஞானிகள், யோகிகள், கற்றுணர்ந்த நெறியாகும். துறவறத்தில் நம் இல் வாழ்க்கை பூரணமடைந்து கனியாகின்றது. துறவற வாழ்க்கையில் மனிதனிற்கு துன்பமுண்டாவதில்லை. அவன் தன் ஆத்ம ஈடேற்றத்தை மட்டுமே காண்கின்றுன். துறவறத்தில் உள்ளோரிடத்து இருந்து பிறந்த வேத வாக்குகளே இந்து மத நெறிகளாகும். வேதங்கள், உபநிடதங்கள், ஆகியன இந் நெறி உள்ளோரது ஆக்கங்களாகும். இத் துறவற நிலை முற்றுப் பெற்றதும், உயிராகிய ஆன்மாவானது இறைவன் எனும் பேரொளியுடன் கலந்து ஈடேற்றம் அடைகிறது. இதுவே ''வானப்பிரஸ்தம்'' என்றும், ''சிலாத்துக நிலை'' என்றும், அழைக்கப்படும் இந்த இரண்டறக் கலந்த ஆன்மாவானது பேரின்ப நிலையடைந்து வாழ்க்கை உய்கிறது. அவ்வாறு

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான நிற்கும்
தெய்வத்துள் வைத்து ஒம்பப்படும்''

எனக் குறட்பாட்களில் காணலாம்.

மேலும் இந்து மதந்தான் தன் சடமாகிய காயத்தை இறைவன் திருத்தலமாக்குகின்றான். மனத்தை ஆலயமாகவும், அறிவை இறைவனாகவும், புலன்களை அங்கு ஒளி வீசிடும் தீபங்களாகவும், ஆனந்தத்தை நிவேதனமாகவும் இறைவன் முன் அர்ச்சிக்கின்றான். இதனையே நாம் காயத்திரி வேதங்களில் பின்வருமாறு காண்கின்றோம்.

"மாத்ரு தேவோ பவ
பித்ரு தேவோ பவ
ஆசாரிய தேவோ பவ"

எனக் காண்கின்றோம். தாய், தந்தை, ஆசாரியர், பேர்ன்றோரை மதிக்கும் உயர்ந்த மனப்பான்மையை இங்கு காணலாம். இறைவனை ஆசானாகக் கொண்டு அறிவடையயும் ஜீவன், தனது வாழ்க்கை முறைமையை வளம் படுத்தலையே மார்ணிக்க வாசகர் வாழ்க்கை மூலம் அறியக் கிடக்கின்றது.

இவ்வாறு நாம் மொத்தமாக ஆராயப் புகுவோமானால், இந்து மதமானது அன்பும், பண்புமுடைய வாழ்க்கை நெறிகள் மூலம் ஊன் உடலைக் கலக்கி உயிரை இறைவனுடன் கலந்திடச் செய்திடும் உண்மையைக் காணலாம். இவ்வாறு இந்து மதப் பண்பாட்டில் வாழ்ந்திடும் ஒருவனது வாழ்க்கை முறையானது, ஆத்மீக வாழ்வில் உய்வடைவதோடு மட்டுமல்லாது வாழ்க்கையை நல்லறமாகுமாறு பதப்படுத்துகிறது. "இந்து மத வாழ்க்கை வாழ்வதற்கே கனிக்கிறது.

வா. அமர்நீதி
வருடம் 12

PLEASE

PATRONISE

OUR

ADVERTISERS

**With Best Wishes**

**from**

Ambiga Jewellers

**77, Sea Street,**

**COLOMBO - 11.**

**With Best Compliments**

**from**

Lalitha

JEWELLERY MART LTD.

Manufacturers of fine Jewellery since 1951

**105, SEA STREET, — COLOMBO-11.**

Phone; 23691 / 31993

**With Best Compliments**

**from**

# P. U. C.

*AT HINDU LADIES COLLEGE*

**23, Rudra Mawatha,**

**COLOMBO 6.**

**Best Compliments**

**from**

# FAIZAL BROTHERS,

**Importers and Haberdashers,**

**167, Main Street,**

**Colombo-11.**

Telephone: 547200

Best Compliments

from

# Swarna Transport Service

**No. 56, Swarna Road,**

**Colombo-6.**

**(Transporters of Export and Import Cargo)**

Best Compliments

from

# VISNU TRADING CO.

**No- 174. 4th Cross Street,**

**Colombo-11.**

Telephone: 24364
34784

# பணிவாய் நெஞ்சமே

# நலம் பெறுவாய் பலவே!

வெண்தாமரையின் எழிலின் அயனில் அன்னக் குழாத்தின் மதன நடையில்
கள்ளம் இல்லாக் குழந்தை நிழலில் கலைகள் படைத்தாள் அங்கயற்கன்னி;
வெற்றித் திருவின் வீரக்கழலை, சித்தித் தேவியின் சிவந்த பாதத்தினை,
கலைத்தாயின் கதம்ப மலர்களை, பணிவாய் நெஞ்சமே நலம் பெறுவாய் பலவே!

பட்ட மரம் தளிர்த்தது-அம்மா! கொட்டிய உதிரம் தீர்ந்தது அம்மா!-உன்
கானக் குயில்கள் இசைத்திட ஆங்கே, பகையால் கருதிய நெஞ்சங்கள் நிமிர்ந்தன
உன் புன்னகையால் பூமி செழித்தது, உன் கடைக்கயல் விழியால் வானம் பொழிந்தது,
வற்றுப் புகழும் வயங்கு செல்வமும் வெற்றி நயமும் தருதேவி-உனை
பணிவாய் நெஞ்சமே நலம் பெறுவாய் பலவே!

சங்கொலி முழங்கச் தாரைகள் அதிர அன்னை துர்க்கா பவனி வந்திட
உறுதி தந்தாய் அன்னையே! சீர் பிறந்தது; உன் கலைகள் வீணையில் ஏழிசையாயின,
சொல்லேர் உழவர் உனையே நினைந்திட, அவர் சொல்லிலும் சிறியோர் நாம் உனைப் பணிந்திட
நல்வித்தை தந்தால் அன்னையே-நானிலம் நயம்பட உரைத்தாய் சிவசக்தி-அவளை
பணிவாய் நெஞ்சமே நலம் பெறுவாய் பலவே!

ஓம்கார ரூபமாய் மூத்தவன் ஈன்றாய்; ஓமின் ஞானப் பொருள் தர இளையவன் வந்தான்
ஓமே பொருளௌ நாயகன் இருக்க, அருட்சக்தி அதனைக் கண்டயர்ந்து மகிழ்ந்தாள்
அள்ளியெடுத்த பிடி மண்ணிலும் நீயிருந்தாய், நம் இதயம் எங்கும் உன்னருள் ஈந்தாய்
இன்றோர் கலைமகள் விழாவையும், இனியோர் கலைத்திருநாளும்
இங்கிதமாய்ப் படைத்திட்டாய்-இவளை,
பணிவாய் நெஞ்சமே நலம் பெறுவாய் பலவே!

நா. விக்னேஷ்
வருடம் 11Q

With the Compliments

of

# CHERISH

Radio Dealers Licence No. 1374

T/V Dealers Licence No 682

**351, Galle Road, Colombo - 4.**

With Best Wishes

from

# KAVITHAS

Wholesale Dealers in Textiles.

Specialists in Shirts

**102-9/2, Third Cross Street,**
**COLOMBO - 11.**

**Phone: 29720**

# HINDU RELIGION —Sanatan Dharma

What is the religion wh'ch we call Sanata, eternal It is the Hindu religion. Only alive the Hindu nation has kept it because in this part of the world it grew up in the seclusion of the sea and the Himalayas, because in this sacred and ancient land it was given as a charge to the Aryan race to preserve through the ages. But it is not circumscribed by the confines of a single country, it is not circumscribed by the confines of a single country, it is not peculiar and for ever bounded to a part of the world. That which we call the Hindu religion is really the eternal religion, because it is the universal religion which embraces all others. If a religion is not universal, it cannot eternal...... ......

This is the one religion that can triumph over materialism by including and anticipating the discoveries of science and the speculations of philosophy,

It is the one religion which Impresses on mankind the closeness of God to us and embraces in its compass all the possible means by which man can approach God.

It is the one religion which insists every moment on the truth which all religions acknowledge that He is in all men and all things and that in Him we move and have our being.

It is the one religion which enables us not only to understand and believe this truth but to realise it with every part of our being.

It is the one religion which shows the world what world is, that it is the hila of Vasudeva.

It is the one religion which shows us how we can best play our part in that hila, its subtlest laws and its noblest rules.

It is the one religion which does not separate life in the smallest detail from religion, which knows what immortality is and has utterly removed from us the reality of death.

**With Best Compliments**

**from**

**MILCO Self reliance & milk for masses**

# Milk Industries of Lanka Co., Ltd.

**267/27 & 269, Galle Road,**

**COLOMBO - 3.**

Tele. 574119, 575446, 575636

# THE MAHA SIVARATHRI

Siva's night or night most propitious for the worship of Siva are the twenty-four Chaturthi occasions of the year but the night of the Krishna Chathurthi of the month of Masi is Maha Sivarathri night, for on that night, Siva revealed himself emerging from the Lingam. Hence the sacred Lingam becomes the chief object of veneration on Maha Sivarathri night.

Maha Sivarathri is observed in every Hindu Temple, big and small and in devout homes. The all - night observance is a must in Siva temples. The whole day and night is most profitably spent in a temple. The night which is devoted to Siva is more important than the observances during the day.

At a temple the night is divided into four quarters from sunset to sunrise. The form of worship essentially consists of Siva pooja. This consists of taking part or contributing to anointing the Lingam (abishekam) and prescribed unguents, decorating it with garlands and performing the sacred Siva Pooja and Siva-archanai during the four watches of the night. At the same time in a seperately appointed place there will be continuous devotional music and religious lectures to enable the devotees to pass the time in prayer and meditation without sleeping throughout the night.

The devotee participating in the Sivarathri night ceremonies anxiously awaits the emergence of the luminous light, within him at the crucial moment— the Lingotpavar Pooja, held at the third watch of the night.

Among the legends concerning this auspicious night of Siva, found in the puranams is that of the hunter Sivagossariar; he had been out hunting, had lost his way and could not get back home at night hungry and sleepless on a tree, the branches of which he kept on shaking all through the night to keep himself awake. The leaves and the dew drops from the branches in their descent fell on a Lingam under the tree and the hunter quite unwittingly had been fortunate to perform abishekam and Pooja to a Lingam, with fasting, on Maha Sivarathri night and was the recipient of divine favours.

The night is emphasized to signify the darkness of the world of senses in which we find ourselves; the endeavour is to pass from darkness to light; from night to the day of deliverence. Early in the morning after Sivarathri night, the streak of a moon in its last phase escapes from the darkness which threatens to swallow it up by union with the resplendent rising sun. This is the symbol of the achievement of Moksha, heavenly bliss illumination, liberation from Samsara, or salvation.

**Udhaya Shanker Wijeyaraj**
Year 11

## WHEN YOUR HOME NEEDS DECOR
## THAT WILL FIT IN
## TRY CRAFTS AS OLD AS ALADDIN

Sri Lanka Hhndlooms Emporium brings together a collection of handlooms exclusively and beautifully finished for you, together with the highest quality hand crafted items such as :

**Handloom Curtaining & Furnishing**
**Brass Ware, Silver Ware, Ceramics,**
**Hand Crafted Pewter Ware, Coir Rugs,**
**Carpets & Cricket Matting,**
**Giftware &**
**A variety of superior Leather Goods**

## GIFT YOURSELF A WORK OF ART

**Shop in air-conditioned comfort.**

# SRI LANKA HANDLOOMS EMPORIUM

408 GALLE ROAD, COLOMBO 3, SRI LANKA,

Tele: 575614 Telex BSDS CE.

HEAD OFFICE:

Dept. of Small Industries, Hemas Building. Bristol Street, Colombo 1.

Tele: 31965, 33913, 31788, 34245

BRANCHES :

Old Town Hall Centre, Colombo, Polgolla, & Kandy

With the Best Compliments
from

**Interocean Shipping & Trading Co., Ltd.**
EXPORTERS & IMPORTERS

INTEROCEAN TRAVELS LTD.
TRAVELS & TOUR OPERATORS

**Agent:** Maldivian Govt. Department of Tourism State Trading Organisation, Male Republic of Maldives

**Publicity and Consultancy Division:**
Recruitment and Manpower Service (Foreign & Local)
Real Estste Brokerage Business Management
Publicity Advertising & Marketing Services

Address:
**676, Galle Road,**
**Colombo-3.**

Telephone: 580062 / 580063
Cable : OCEANCARS
Telex : 21129 A/B INTOCEN

---

With Best Compliments from

*FOR* OLD & LATEST ENGLISH, TAMIL, SINHALA & HINDI VIDEO FILMS
QUALITY AUDIO, VIDEO RECORDINGS, ALSO WE DO
FREE HOME DELIVERY OF VIDEO FILMS AND T. V, VIDEO DECK AND
ELECTRONIC EQUIPMENTS REPAIRS

For All These Visit:

**CINE VIDEO (PVT) LTD.**
**421 1/21, Galle Road,**
**(First Floor)**
**Wellawatta.**
**Colombo-6.**

Telephone: 588771

**With the Compliments**

**of**

TELEX & INTERNATIONAL CALLS
LOCAL CALLS

**Photo Copying, Duplicating, Typing**

**&**

**Stencil Cutting**

Gilani International Communication Service

**36A 1/1, Galle Road, Colombo - 6.**

**With the Best Compliments**

**from**

Rathgama Stores

**Importers Exporters & Commission Agents**

**64, 4th Cross Street, Colombo-11.**

Telephone: 20693

Grams : YADCAR

With Best Wishes

From

# INTER DECOR ASSOCIATES

**Interior Decorators, Furniture Manufacturers**

**&**

**Specialist in pantry & Bed Room Cuboards**

**22/1, Alexandra Road,**
**Colmobo 6.**

Tele. **584405**
**500746**

With best compliments

from

# RE COLOMBO STORES

**No.-D308, Galle Road,**
**Wellawatte,**
**Colombo-6.**

Tele. **581061**

IT'S A PLEASURE TO COOK WITH

# CHEFSJOY

CHEFSJOY is a pure, refined and deodorised Vegetable Cooking Oil, specially processed to retain the natural flavour of food. Unlike ordinary cooking oils, CHEFSJOY is free of impurities and safer. As a cooking medium, CHEFSJOY is an ideal substitute for butter, margarine, dripping, ghee etc.

**Max Retail Price :**

| | | |
|---|---|---|
| **740 ml.** | **(670 gms)** | **Rs. 23/-** |
| **1.15 litre** | **(1 kg.)** | **" 32/-** |
| **2.82 litre** | **(2.450 kg.)** | **" 79/-** |

*A QUALITY PRODUCT OF*

CEYLON OILS &
FATS CORPORATION

**SEEDUWA**

Telephone : 030 - 3530, 3531 3569

*ENJOY THE NATURAL FLAVOUR OF FOOD WITH CHEFSJOY*

**With Best Wishes**

**from**

**HAVE A GOODTIME WITH**

**"SUPREME"**

**QUARTZ WALL CLOCKS**

Sole Agents in Sri Lanka

# ESWARAN BROTHERS

**267, Sea Street,**

**COLOMBO - 11.**

Tele: 32599, 22744, 547608, 35842    Telex: 21275, 21886 ESWARAN CE

**With Best Compliments**

**from**

# Jaya Nithiyakalyani Jewellers

## ජය නිත්‍යකල්‍යාණි ජුවලර්ස්

**69, හෙට්ටි වීදිය, කොළඹ - 11,**

**69, SEA STREET, — COLOMBO-11.**

Phone; 36923 / 28536

**With Best Compliments**

**from**

# MASCONS LIMITED

**175, Sri Sumanatissa Mawatha**
**COLOMBO - 12**
Phone: 25561 - 3

**With Best Compliments from**




# SOVEREIGN JEWELLERY STORES

**SOVEREIGN GOLD JEWELLERY - EXPERT**
**CRAFTSMANSHIP - GUARANTEED QUALITY**

**114, SEA STREET, — COLOMBO-11.**

**THE RENOWNED HOUSE FOR SOVEREIGN GOLD JEWELLERY**
Phone; 26731

With the Compliments

of

Weligama Stores

139, 4th Cross Street, Colombo-11.

වැලිගම ස්ටෝර්ස් வெலிகம ஸ்டோர்ஸ்

General Merchants & Commission Agents

for Local Produce

Phone: 23271

Best Compliments

from

Greenlands Hotel Ltd.

A First Class
Residential Hotel for Vegetarians

3-A, Shrubbery Gardens,
Bambalapitiya,
Colombo - 4.

Telephone: 585592, 581986

Grams: Greenlands

Wholesale & Retail Dealers in

TEXTILES

ANCHOR

Importers & Exporters

A 283, Main Street, 2nd Floor,
Colombo-11.
PHONE: 27397

With best compliments

from

INDIAN BANK

# நாட்டுக்கொரு நாவலர்

நாவலர் இன்தமிழ் நலனுகர் தென்றல்
காவலர் சிவநெறிக் கருணையின் கொண்டல்—அவர்
வாதினில் ஏதிலர் கோளரி வஞ்சச்
சூதினர் முன்னர் சுடர்ப்பெருஞ் செந்தீ.

காதலி தமிழுடன் மோகம் விளைத்தார்
கோதையட் குவசன நடையை அளித்தார்—சைவம்
பேசிட வோர்பல மேடை யமைத்தார்
ஆசிடும் அஞ்ஞான மாயை அளித்தார்.

இன்பத் தமிழ் ஏடு தேடி எடுத்துயிர்(ப்)
பஞ்சால் துடைத்துப் படித்துக் களித்துப்பின்—அவை
எங்கும் உலாவர எந்திரம் சேர்த்திசை
சிஞ்சை தழுவிட விளங்கினன் நாவலன்.

நாட்டுக்கொரு நல்லே நாவலன இல்லேயேல்
பாட்டுக்கும் சிவநெறிப் பண்பிற்கும் பிறப்பிலா—இன்ப
வீட்டுக்கும் ஒளிக்கல்வி விளக்கிற்கும் தமிழ்க்கலேக்
காட்டுக்கும் ஏங்கிக் கலங்குமிவ் வுலகமே!

செல்வன் ச. நிஷ்சங்கர்
ஆண்டு 12

**With Compliments**

**from**

# Hybrite Textile Show Rooms

534, GALLE ROAD, COLPETTY. COLOMBO 3. (T' 573329)

*FOR*

**exclusive designs in wide range of colours**
**of**

**Sri Lanka famous**
*HYBRITE FASHIONABLE TEXTILES*
Manufactured and distributed by

## HYBRO GROUP OF COMPANIES

**209, Main Street, Colombo-11. T' 29298-548775**
Whole Sale:- 233, Main Street, Colombo II. T' 24838 - 24835
Factory:- 2, Maligawa Road, Ratmalana. T' 713651 - 714964

**Best Compliments**
**from**

# MOTOROLA

*WORLD LEADER IN RADIO COMMUNICATIONS*

Distribution & Service by

## EQUIPMENT TRADERS LTD.

**294, Galle Road, Colombo-4.**

Telephone; 584198, 500613

# இந்துக்களின் கலைத்திருவிழா

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவு காட்டு இறைவா'' என்று ஒரு இந்து மத அடியான் ஆண்டவனைக் கேட்டான் என்றால், இந்து மதம் தாய்மைக்கு தாயின் பரிவுக்கு எத்தகைய உயர்ந்த இடத்தை அளித்துள்ளது என்பது எமக்குப் புலனாகிறது. இதனால் தான் இந்து மதத்தவன் அகில உலகத்தையே இயக்குகின்ற ஆண்டவனின் சக்திக்கு தாயுருக்கொடுத்து உலக மாதா என்றும், பராசக்தி என்றும் அழைக்கின்றான். அவளிடம் ''காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும் அந்தக் காணி நடுவினிலே ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும் அங்கு கத்தும் குயிலோசை வந்து காதில் பட வேண்டும்'' என்று அந்த மாதாவிடம் வேண்டுவன வேண்டி நின்றான் பாரதி என்றால் அவளின் இரக்க உணர்வை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மாதா பராசக்திக்குரிய விரதங்களிலே தலையானது நவராத்திரி விழாவாகும் புரட்டாதி மாதம் வளர் பிறை பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாட்கள் இது அனுட்டிக்கப்படும். பத்தாம் நாள் ''விஜயதசமி'' தினமாகும், இது ஒன்பது நாட்கள் தொடர்ந்து எடுக்கும் விழா ஆகையால் இதனை நவ-இராத்திரி அஃதாவது ஒன்பது இராத்திரிகள் எனப் பொருள்படும்.

மக்கள் பக்தியோடு இதனை நோற்பதால் நோன்பு எனவும், ஆடிப்பாடி களிப்புற கொண்டாடுவதால் கலைமகள் விழா என்றும், வீடுகளில் கும்பம் வைத்து, மஞ்சள் பூசி, குங்குமம் சொரிந்து, கோலமிட்டு, கொலுவைத்து, உற்றார் உறவினருடன் உண்டு மகிழ்வதால் பண்டிகை என்றும் அழைக்கிறோம்.

இவ்வொன்பது நாட்களும் அஞ்ஞான இருளைப்போக்கி ஞான ஒளியைத் தருபவளாகிய ஞானாம்பிகையை வணங்குகிறோம். இம்மாதாவின் அற்புதலீலா விநோதங்களும், திருவருள் பாலிப்புகளும் எண்ணிறந்தவை அன்னை பராசக்தி எமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வீரம் செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் அள்ளித்தருபவள் எனவே இந்த ஒன்பது நாட்களிலும் நடைபெறும் விழாவை மலைமகள் (வீரம்) அலைமகள் (செல்வம்) கலைமகள் (கல்வி) என்ற மூவரையும் வணங்குகிறோம்.

இவ்வுலகில் தலைதூக்கி வெறியாடும் அசுர குணங்களை அடக்கி, அரக்க நெறிகளை அழித்து அகிம்சை நெறி ஓங்க அருள்புரியும் அன்னை துர்க்கா தேவிக்கு முதல் மூன்று நாட்களும் விழா எடுக்கிறோம். பல இம்சைகளுக்கு ஆளாகி இன்னலுறும் நமக்கு வீரத்தை ஊட்டி வாழ வழி காட்ட அத்தேவியின் அருள் நமக்கு கிட்டுகிறது.

''அருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்பது போல் ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்றான் வள்ளுவன். அத்தகைய இன்றியமையாத செல்வத்தை நமக்கு வாரி இறைப்பவள் லக்ஷ்மியே. இவ் லக்சுமியை பூவின் திரு என்றும் - அழகின் புனைகலம் என்றும், யாவர்க்கும் செல்வம் என்றும் கூறுவர். இத்திருமகளுக்கு நடு மூன்று நாட்களும் விழா எடுக்கிறோம்.

இறுதி மூன்று தினங்களும் கலைத் தெய்வமாம் கலைமகள் இரவுகள். இந்நாட்கள் கலை அம்சத்திற் சிறந்தவை, ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மையின் அருள் உண்டேல் வராது இடர்'' என்றான் கம்பன்'

''உழுவார் கரங்களிலும், கவிவாணர் நாவினிலும், அறிவாளர் நெஞ்சிலும் ஆடிக்களிக்கும் மயிலை உன்பாதம் அடைக்கலமே'' என்றான் கவிமணி இத்தகைய சிறப்புப் பொருந்திய கலைமகளுக்கு இறுதி மூன்று இரவுகளும் இசைந்து விழா எடுக்கிறோம். சரஸ் என்றால் நீர் அல்லது ஒளி என்பது அர்த்தம். இத்தகைய ஒளி பொருந்தியவளும் சகல வித்தைகளையும் தரும் தாயாம் சரஸ்வதியின் திருவிழா ம[illegible]கிய நாம் மகிழ்ந்து கொண்டாட வேண்டிய பெருவிழா.

அடுத்து வரும் பத்தாம் நாள் வெற்றியைக் குறிக்கும் விஜயதசமி. ஒன்பது நாட்களும் நோன்பு இருந்து செய்த சக்தி பூசையின் பலன் அன்று கைகூடும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. அன்று கோயில்களில் நடைபெறும் மகுடாசுரசங்காரம் தேவி வழிபாடு ஆணவ மலத்தை நீக்கி ஞானத்தைக் கைகூட வைக்கும் என்னும் பெருந்தத்துவத்தை விளக்கி நிற்கிறது.

நவராத்திரி நாட்களில் பக்தர்கள் சகஸ்ரநாமம் சகலகலாவல்லி மாலை போன்ற தோத்திரங்களை பக்திரசத்துடன் பாடி வணங்கிடுவர். பண்டைய மன்னர்கள் கூட நவராத்திரியை சிறப்புடன் கொண்டாடினார்கள் என்றால் அதன் சிறப்பை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

எழுத்தாக்கம்,

க. பிரதீபன் (10 Q)

**With the Compliments**

**of**

# DURO PIPE INDUSTRIES LTD.

**311, Old Moor Street, 2nd Floor, Colombo-12, Sri Lanka.**

Phone;
549664, 540759, 540760

Telex:
21909 VIJAYA CE

**With the Best Compliments**

**from**

# NANDA TRADING COMPANY

**Importers & Exporters, Paper Merchants & Stationers**

Importers & Stockists of all kinds of
CHINESE & INDIAN PRINTING & CUTTING MACHINERY

**258/9, Dam Street, Colombo-12.**

T'Phone: 549942. 25066

T'Grams: GOLDMARI

# கல்வியா? செல்வமா? வீரமா?

நாம் எமது தேவைகளை மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கலாம். அவையே கல்வி, செல்வம், வீரம் ஆகும். உலகில் இம்மூன்றில் சிறந்தது எது? என்ற கேள்விக்கு இதுதான் சிறந்தது என்று குறிப்பிட்டுக் கூறுவது சிக்கலான விடயமாகும். எனினும் இதைப்பற்றி சிறிது ஆராய்வது சுவையான அம்சமும், இக் கட்டுரையின் நோக்கமும் ஆகும்.

கல்வி என்பது பாடசாலைகளில் பெறும் அறிவு மட்டுமன்றி செய் முறையில் பெறும் அனுபவம், சிந்திக்கும் ஆற்றல், என்பனவும் ஆகும். இவை இல்லையென்றால் மனிதன் இன்னும் ஆதி மனிதனாகவே இருந்திருப்பான் என்பதில் ஐயமில்லை. எனவே ஆதி மனிதனிடம் இருந்த அறிவு எனும் மூலதனமே இன்றைய நவீன உலகை தோற்றுவித்தது எனலாம்.

''கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடு அல்ல மற்றையவை'' என்கிறது வள்ளுவம், அதாவது ஒருவனுக்குக் கல்வியே அழிவில்லாத சிறந்த செல்வம்; மற்றவை செல்வம் அல்ல. ஏனெனில் ஒருவர் கற்ற கல்வியை மற்றவர்க்கு புகட்டும் போது அவரிடம் உள்ள கல்வி பெருகுமே தவிர குறையாது. மேலும் இதை திருடி வைத்திருக்கவும் முடியாது அப்படியாயின் கல்வியே சிறந்ததா? அதுவே நிலையானதா?

உயர்ந்த படிப்பை முடித்துவிட்டு வீதி வீதியாக சென்று வேலைதேடும் மனிதர்களையும் படிப்பறிவு இல்லாமலே உயர்ந்த பதவியை வகிக்கும் மனிதர்களையும் நாம் அன்றாட வாழ்க்கையில் காண்கின்றோம். அதுமட்டுமல்ல, கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் மதிப்பு என்றால் கற்றவன் பைத்தியக்காரனாக இருந்தாலும் எல்லோரும் மதிப்பார்களா? ஆகவே கல்வி நிலையாக இருப்பினும் அதை கற்பவர்களுக்கு அது நிலையாக இருப்பதில்லை.

நாங்கள் படிப்பது எங்கள் வாழ்க்கைக்கு தேவையான செல்வத்தைப் பெறுவதற்கு என்றே கூறலாம். எனினும் கல்வி அறிவு அற்றவர்களும் இன்று செல்வந்தர்களாக திகழ்கிறார்கள் அது அவர்களின் அதிஷ்டமும் ஆகும், எனவே கல்வியினால்தான் செல்வத்தைப் பெறமுடியும் என்பது பிழையாகும்.

பணம் பத்தும் செய்யும். ஆம், ஏழை ஒருமுறை சிரிக்கும் போது வறுமை அவன் வாயை மூடுகிறது. பணக்காரன் ஒருமுறை அழுதால் பணம் அவன் கண்ணீரைத் துடைக்கிறது. இதனால்தான் ''பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்கிறார்கள் போலும்.

பணத்தினால் உணவு, உடை, வீடு என்று பலவற்றை வாங்கும் நாம் சிலவற்றை வாங்க முடியாமல் போய்விடுகிறது. பணத்தை வைத்து புத்தகத்தை வாங்கும் ஒருவன் அறிவை வாங்க முடியுமா? அல் அல்லது பணத்தினால் காற்றை கையிலே பிடித்து கண்ணால்தான் பார்க்க முடியுமா? இவ்வளவும் ஏன், சில நோயை தீர்க்கும் பணம் மரணத்தை தடுக்குமா? ஆகவே செல்வத்தினால் நமது எல்லா தேவைகளையும் நிறைவு செய்வது முடியாத விடயமாகும்,

செல்வத்தை நிலைபெறச் செய்ய பாதுகாப்பு தேவைபடுகிறது. பாதுகாப்பில் அடங்கியிருப்பது திறமை, வீரம் என்பனவாகும். இவை ஆணுக்கு மட்டுமல்ல பெண்ணுக்கும் உரியதே வீரம் உள்ளத்தில் இருப்பது, உடலில் இருப்பது என இருவகைப் படுத்தலாம். உடல் வலிமையை வளர்க்க உடற்பயிற்சியும், உள்ள வலிமையை வளர்க்க யோகப்பயிற்சியும் செய்கிறோம் இவ்வாறு செய்து உடலையும் உள்ளத்தையும் ஒழுங்காக வைத்திருப்பவர்களை மரணம் நெருங்குகிறது ஆனால் மற்றவர்களோ மரணத்தை நெருங்குகிறார்கள்.

கள்வர்களிடமும் பகைவர்களிடமும் இருந்து தப்புவதற்கு பல வித்தைகளை பயின்று ஆதிமக்கள் வீரர்களாக திகழ்ந்தார்கள். வீரத்தினால் முன்னைய மன்னர்கள் பல நாடுகளை வெற்றி கொண்டு செல்வந்தர்களையும் அறிவாளிகளையும் அடிமையாக்கினார்கள் அது மட்டுமல்ல நோயின்றிய வாழ்வையும் வாழ அவர்களின் வீரம்தான் வழிவகுத்தது எனலாம் இன்று பெரிய பதவிகளை வகிக்கும் சில மனிதர்களை நாம் மதிப்பதில்லை. ஏனெனில் பதவிக்கேற்ற தோற்றமும் உற்சாகவும் அவர்களிடம் காணப்படுவதில்லை. இவ்வாறு சிறப்படையும் வீரமானது சில வேலைகளில் ஆபத்தையும் விளைவித்து விடுகிறது மேலும் எவ்வளவு பெரிய வீரனாக இருந்தாலும் அவனும் ஒரு பிடி சாம்பலிலேயே அடங்குவான். இதை பெரியவர்கள் ''காயமே பொய்யடா காற்று அடைத்த பையடா'' என்று அழகாக கூறியிருக்கிறார்கள்.

அப்படியாயின் இம் மூன்றிலும் சிறந்தது எது? கல்விதான் சிறந்தது என்றால் படிப்பறிவு அற்றவன் இவ்வுலகில் அதிஷ்டத்தினால் செல்வத்தை பெற்று வாழவில்லையா. செல்வம் தான் சிறந்தது என்றால் செல்வத்தை வைத்துக் கொண்டு ''ஒரு கோடி, செல்வம் இருந்தென்ன லாபம், எதிர்காலம் நமது பேர் சொல்ல வேண்டும்'' என்று நிம்மதியை தேடி திரிவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவையிரண்டும் அல்ல வீரம் தான் சிறந்ததென்றால், யுத்தமின்றியே மகாத்ம காந்தி அவர்கள் இந்தியாவிற்கு விடுதலை வாங்கி கொடுக்கவில்லையா?

எனவே ஒரு கணம் சிந்திக்கும் போது இவை மூன்றும் சிறந்தவை அல்ல என்ற எண்ணம் தோன்றினால் ஒரு மனிதனின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இவை சிறப்பாகவே, விளங்குகின்றன அத்துடன் இவை மூன்றையும் இரண்டு கண்களுக்கு ஒப்பிடுவோமாயின் இவற்றில் ஒன்று இல்லாமல் இல்லாமல் இருப்பது ஒரு கண்ணை இழந்ததற்கு சமமூகும், ஆகவே கல்வி, செல்வம், வீரம் என்பன ஒளிமயமான வாழ்க்கைக்கு அவசியமாகும்.

விஸ்வலிங்கம் சுவர்ணராஜா
வருடம் 13M

**With the Compliments**

**of**

# Associated Electrical Corporation Ltd.

**Manufacturers of SISIL Refrigerators**

**140, Vauxhall Street,**

**Colombo - 2.**

**Telephone No; 26211-13**

**With the Best Compliments**

**from**

# The Manufacturers of

# "CHESTO"

**With the Compliments**

**of**

# MAJESTIC ELECTRIC Co., LTD.

**No. 103 - 105, Galle Road,**
**Colombo 4.**

**No. 2, De - Vos-Avenue**
**Colombo 4. (Project - Division)**

**Tel: 581516 - 581884**

**Best Compliments**

**from**

# NEW PUSHPA STORES

Dealers in
Rice & Curry Stuffs and Oilman Goods Etc.

**127, Galle Road,**
**COLOMBO 4.**

Dial. 588866 for Free Delivery

**With Best Wishes**

**from**

## GOODFARE ENTERPRISE

**65, Galle Road, Colombo-4.**

Telephone : 587569

PLEASE

PATRONISE

OUR

ADVERTISERS

# இந்துசமயமே அன்பின் பிறப்பிடம்

இந்து சமயமே அன்பின் பிறப்பிடம். அன்பு! மூன்றே எழுத்துக்களில் விரியும் முடிவுறுக் கருத்து அதனை விளக்க வார்த்தை உகந்ததல்ல; அனுபவமே சிறந்தது, கற்கண்டின் சுவையை எத்தனை வார்த்தை, களிற்தான் எடுத்துரைக்கினும் அதனை உள்ளபடி புரிந்துகொள்ள இயலாது' ஆயின் கற்கண்டை சுவைத்துப் பார்ப்பின் மட்டுமே அதன் சுவையைப் புரிந்துகொள்ளலாம். அவ்வாறே அன்பும்,

அன்பே சிவம் என்கிறது இந்து மதம். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியை அன்புருவாய்க் காண்கிறது அம்மதம். அதன் அசையாத அடித்தளம் அன்புதான். அதுவே இந்துமதத்தை இத்துணைக் காலமும் நிலைத்திருக்கச் செய்தது; இனியும் நிலைத்திருக்கச் செய்வது.

இவ்விந்து மதம் காணும் அன்பு சாதாரண மாக்கள் கருதும் அன்பல்ல. அது தன்னலமற்றது. தூய்மையே உருவானது, அவ்வன்பில் காம, குரோத மோக லோப மத மாச்சர்யங்கள் காய்ந்து மறைகின்றன; ஆண், பெண், பேதம் அற்றுப் போகிறது. சாதி மத பேதங்கள் ஆதவன் முன் இருள் போல அகன்று விடுகின்றன அவ்வன்பு பெருகி, இறைவனை உணரும்போது பக்தியாகிறது; உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து கருணை கடலெனப் பொங்கி உகைத்து உயிர்கள் மீது பாய்கிறது, பார்க்குமிடமெங்கும் நீக்கமற இறைவனைக் காணும் பேறு வாய்க்கிறது.

இவ்வாறு அன்புருவாகும் வழிதான் என்ன? அதுவே பக்தி மார்க்கமென விடை பகர்கிறது இந்து மதம். பக்தியின் மூலம் ஈசன் உணரப்படுகிறான். அவன் மீது ஆற்றொணாத அன்பு பிறக்கிறது, அறிவு பெருகிப், பார்க்குமிடம் எங்கும் ஈசனே நீக்கமற்று உள்ளான் என்று உணரும் பக்குவம் வாய்க்கிறது. அவன்மீது பெருகும் அன்பு. அவன் சொரூபங்களான உயிர்கள் மீது பாய்கிறது. இதுவே அன்பின் எல்லை நிலம், இவ்வழியே அன்பின் எல்லையை அடையும் வழி என்கிறது இந்து மதம்.

இவ்விந்து மதத்தின் செல்வர்கள் அன்பின் சொரூபங்கள். மக்கள் சேவையை மகேசன் சேவை எனக் கொண்டுவிட்ட இஞ்ஞானச் செல்வர்கள் உலகத்தவர் மீது கொண்ட அன்போ அளப்பரியது! அதனாலன்றோ அவர்கள் தமது முக்தியையும் துறந்து உலக சேவை செய்தனர். ''கருணை என்பது மனித குலத்திற்கு மட்டுமே உரியதல்ல. அது அப்பாலும் விரிய வேண்டும். உலகம் முழுவதுமே பரந்து தழுவி நிற்க வேண்டுமெனப் பகர்ந்த சுவாமி விவேகானந்தரும் ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய இராமலிங்க சுவாமிகளும் அன்பின் சிறந்த உதாரணங்கள்.

நம்மை அன்பு செய்யாது தடுத்து நிற்பதென்ன? அஞ்ஞானம் தான். அஞ்ஞானத்தால் நாம் இவ்வுலக வாழ்வை நிலையானதென்று நம்பி விடுகிறோம். அக்கணத்திலிருந்து ஆசை பெருகத் தொடங்குகிறது. ஆசை வந்தாலோ அன்பு பட்டுப் போகின்றது. நாமனைவரும் ஈசன் குழந்தைகள் என்பதை மறந்து விடுகிறோம். நமக்குள் பேதங்கள் தலைதூக்குகின்றன. எனவே இப்பேதமைகள் அகன்று மறைய ஞானமே சிறந்த வழி. இந்த ஞானத்தை அடைய இந்துமதம் வழிகளைக் காட்டி நிற்கின்றது.

இவ்வண்ணம் ஞானத்தை வளர்த்துப் பக்தியைப் பெருக்கி அறியாமையைக் களைந்து அன்பை ஊற்றெடுக்க வைக்கும் ஞானமார்க்கமும், பக்தி மார்க்கமும் இந்து மதத்திற்கே தனிச்சிறப்பான உடைமைகள். எனவே அன்பின் விளக்கம் கூறி, எல்லையற்ற அன்பின் வடிவமாகும் வழியையும் கூறிநிற்கும் இந்து மதமே அன்பின் பிறப்பிடம் என்பது இதயம் உணர்ந்த உண்மையாகும்.

மா. திருவாசகர்,
வருடம் 13M

**With the Best Compliments**

**from**

# NEW UNITY AUCTIONEERS

**Call us for Valuations and**

**Sales of moveable and inmoveable**

**T. Chandrapalan**
**Auctioneer, Broker, Valuer and**
**Court Commissioner,**

**No. 60, Ananda Coomaraswamy Mawatha**
**(Green Path)**
**Colombo 7**

**Phone: 574568**

# இலங்கையில் இந்துசமயம்

இலங்கை பல இன மத மக்கள் வாழும் நாடுகளில் ஒன்ருகும். உலகின் பிரதான மதங்களான சைவம் பௌத்தம் கிறீஸ்த்தவம், இஸ்லாம் ஆகியவற்றை பின்பற்றும் மக்கள் இங்கு வாழ்கின்றனர். சைவம் முதலிலும், பௌத்தம், கிறிஸ்த்தவம், இஸ்லாம் ஆகியன பின்னரும் இந் நாட்டுக்கு அறிமுகமாயின. இந்து சமயம் 2500 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இந்நாட்டு மக்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அனுராதபுரக் காலத்தில் இந்நாட்டில் இந்து சமயம் இருந்ததை வரலாற்றுக் காரணிகளிலிருந்து அறியக்கூடியதாக வுள்ளது. பொலநறுவைக் காலத்தில், குறிப்பாக சோழர்ஆட்சிக்காலத்தில் இந்துமதம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. இதற்கு இக்காலத்தில் அமைக்கப்பட்ட சிவாலயங்கள் சான்ருகும், பாடல் பெற்ற தலங்களான திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் போன்றனவும், கதிர்காமம், முனீஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் சட்டநாதர் கோயில், வீரமாகாளியம்மன் கோயில், செல்வச்சன்னதி, மாவிட்டபுரம், கிழக்கிலங்கையில் காணப்படும் பல கண்ணகியம்மன் கோவில்கள் போன்றவையும் இலங்கையிற் சைவர்களின் வரலாற்றைக் காட்டி நிற்கின்றன. நம் இலங்கையின் கல்வி வரலாற்றை நூற்ருண்டுகளுக் கூடாகப் பின்னேக்கிப் பார்க்கும் எவரும் இந்து மரபிலான கல்வி இலங்கையின் பன்னெடுங்காலமாக பரவியிருந்தது என்பதை உணராமல் இருக்க முடியாது.

இலங்கையின் இந்து மரபின் செல்வாக்கு தென்னிந்தியாவில் இருந்து படையெடுப்புகளுடனும் தனித்தும் வந்து குடியேறிய மக்களுடைய வருகையாற் பலமடைந்தது. அதன்பயனுக இலங்கையின் வடபதியுகின் சைவமரபையும் வழிபாட்டையும் பேணிக்காத்து வளர்த்த ஒரு தமிழரசு உருப்பெற்றமைக்கு வரலாறு சாட்சியம் கூறுகின்றது அவ்வரசின் கீழ் சைவமரபும், அதன் கட்டுக்கோப்பினுள் அமைந்த கல்வி முறையும் யாழ்ப்பாண இராச்சியத்தில் செழித்தோங்கின அந்நிலை கிறிஸ்த்துவுக்குப் பின் பதினைரும் நூற்ருண்டு வரைக்கும் நிலைத்திருந்தது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை,

பதினைரும் நூற்ருண்டில் இருந்து இலங்கையில் மேனுட்டார் ஆட்சியும், அத்துடன் கூடிய கிறிஸ்த்தவ மதங்களின் ஆதிக்கமும் இடையிட்ட ஒரு காலத்திற்கு சைவ மரபினையும், வழிபாட்டையும், அவற்ருேடு பிணைந்த சைவக் கல்வியையும் இருட்டினுள் அமிழ்த்திவிட்டன.

இவ்வாறு 16ம் நூற்ருண்டில் இருந்து பலகோணங்களிலும் நசுக்கப்பட்டுவந்த சைவசமயம் 19ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் இருந்து புத்துயிர்பெற்று எழுச்சியுறுவதை நாம் காண்கின்ருேம். அப்புத்துயிரை ஊட்டியவர் சைவமும் தமிழும் தழைத்தோங்க நல்லை நகரில் வந்துதித்த நாவலர் பெருமானேயாவார் 'நல்லை ஆறுமுக நாவலர், தோன்றியரேல், சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே'! என்று கேட்கும் அளவுக்கு சைவமும் தமிழும் தழைத்துச் செழிக்கச் செயலாற்றிய பெருமாஞர் அவர். நாவலர் எடுத்த முதல் முயற்சி தடைப்பட்டாலும் வண்ணர் பண்ணையில் அவர் தாபித்த ''சைவப்பிரகாச வித்தியாசாலை'' இன்னும் ''நாவலர்'' வித்தியாசாலை என்ற பெயருடன் இயங்கி வருகின்றது. நாவலருடைய பணியின் பேருக இணுவில், கோப்பாய் ஆகிய இடங்களில் மேலும் பள்ளிக்கூடங்கள் தோன்றின. சைவமதக் கல்விக்கு நாவலர் செய்த சேவை பள்ளிக்கூடங்களை தாபிப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தமிழ் உரைநடை வளர்ச்சி, மாணவருக்குகந்த மொழி! சமயபாட நூல்களின் ஆக்கம் ஆகியவையும் நாவலர் பெருமையை மெருகுடன் விளங்க வைக்கின்றன.

நாவலர் மட்டுமன்றி இராமநாதன் போன்ருேரும், சைவபரிபாலன சபை, இராமகிருஷ்ண சங்கம் போன்றவையும் இலங்கையில் சைவக் கல்வி எழுச்சி பெற்று விளங்க காரணமாக இருந்தன.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் கொழும்பிலும் சைவ எழுச்சி காணப்பட்டது. இதற்கு வழிவகுத்து வைத்தவர் பொன்னம்பலம் முதலியார் ஆவார்,

இலங்கையிற் கல்விப் பொறுப்பினை அரசு ஏற்கும் நிலை 1960ம் ஆண்டில் உருவாகியபோது சைவக் கல்வி தனித்துவத்துடன் இந்நாட்டில் நிலைத்திருந்தமைக்குச் சைவப் பெரியோரும், சைவதாபனங்களும், செய்த சேவைகளே காரணங்களாகும். எனவே யாமும், வருங்காலச் சைவ சந்ததியினரும் இப் பெரியோர்க்கும் இத்தாபனங்கட்கும் நன்றிமறவாக் கடம்பாடுடையோம்.

வாழ்க சைவம், வாழ்க சைவசமயம்.

கு. தயாபரன்,

Year - 13M.

# Start with Mitel.

Now that your business is at peak efficiency you need efficient communication.
Starting point is an efficient telephone system. That means Mitel
Whatever business you are in, however big or small there is a Mitel superswitch
to meet your needs today and tomorrow.
They range from SX-5 to SX-200 with extention capabilities from 6-200 lines
They all use microprocessor control and Mitel's own world leading semiconductor technology
to out perform any comparable systems on the market
That is why **40% OF THE WORLDS PABX MARKET IS MITEL.**
Mitel provides more facilities, reliability easier to operate and maintain.
They all save your time, space, energy and money.

**THAT IS WHY YOU START WITH MITEL FOR EFFICIENT BUSINESS COMMUNICATIONS**

**Prices Range From Rs. 1450/- Upwards**

*SOLE AGENTS IN SRI LANKA*

## Electronic Engineering Systems (Pvt) Ltd.

**278, Union Place, Colombo - 2.**

Telephone: 545706—9 Telex: 22466 EESY - CE



PRINTED BY
**ELJEES LANKA (Pte) LTD.**
297 GALLE ROAD COLOMBO 3.
TEL: 585802

With the Best Compliments

from

ASBESTOS CEMENT INDUSTRIES LTD.

COLOMBO & RATMALANA

Start with Mitel.

Now that your business is at peak efficiency you need efficient communication.
Starting point is an efficient telephone system. That means Mitel
Whatever business you are in, however big or small there is a Mitel superswitch to meet your needs today and tomorrow.
They range from SX-5 to SX-200 with extention capabilities from 6-200 lines
They all use microprocessor control and Mitel's own world leading semiconductor technology to out perform any comparable systems on the market
That is why 40% OF THE WORLDS PABX MARKET IS MITEL.
Mitel provides more facilities, reliability, easier to operate and maintain.
They all save your time, space, energy and money.

THAT IS WHY YOU START WITH MITEL FOR EFFICIENT BUSINESS COMMUNICATIONS

Prices Range From Rs. 1450/- Upwards

*SOLE AGENTS IN SRI LANKA*

Electronic Engineering Systems (Pvt) Ltd.

278, Union Place, Colombo - 2.

Telephone: 5 4 5 7 0 8—9 Telex: 22466 EESY - CE

# We extend Our Most Grateful

# Thanks to

Our Principal, Teacher-in-charge, Student, Chairman and the Secretary for appointing us to produce this Souvenir "Sivasakthi 87" and for their inspring Messages.

Our general advertisers without whose contribution, this publication would not have seen possible.

Our Printers – Eljees Lanka (Pte) Ltd, for the job well done. We owe a very special thanks to Mr. Vijeyanadan of Eljees Lanka (Pte) Ltd. who helped us greatly in the Printing Work.

Our photographer, S. Balakrishnan, a student of Royal College for his clear and beautiful photography.

PRINTED BY
ELJEES LANKA (Pte) LTD.
297 GALLE ROAD COLOMBO 3.
TEL: 586802

Yours,


**R. Raveendran,**
Editor, Sivasakthi '87

**With the Best Compliments**

**from**

# ASBESTOS CEMENT INDUSTRIES LTD.

**COLOMBO & RATMALANA**




# Linking People with Progress

**HATTON NATIONAL BANK LIMITED**

10, R.A. de Mel Mawatha,
Colombo 3.